தமிழக இயேசு சபையினரின்

# பாதைகள்

ஆண்டிற்கு மும்முறை

யூபிலி சிறப்பிதழ்

பிப்ரவரி-2020





## இளைஞரே, ஆற்றலோடு மாற்றம் நோக்கி

## இளைஞர் ஆண்டு 2020

# யூபிலி விழா நாயகர்களை அன்போடு வாழ்த்துகிறோம்

## குருத்துவப் பணியில் 50 ஆண்டுகள்



இக்னேஷியஸ் செபாஸ்டின்



இக்னேஷியஸ் வியாகப்பா



ஜேம்ஸ் பாரதபுத்ரா



ஜேசுராஜா C. பவுல்



லடிஸ்லாஸ் சின்னதுரை



சவரிமுத்து S. பாக்கியம்



S.M. செல்வராஜ் எட்வர்ட்



சூசைமாணிக்கம் செபாஸ்டின்



வியாகுலதாசன்

## குருத்துவப் பணியில் 60 ஆண்டுகள்



டயஸ் விட்டாலிஸ்



R. ஜார்ஜ்

# தெறிக்கவிடும் கனவுகள்



2020 ஆம் ஆண்டு, முதல் நான்கு வல்லரசுகள் வரிசையில் இந்தியா இடம் பெற வேண்டும் என டாக்டர் APJ அப்துல் கலாம் கனவு கண்டார். வழக்கமாக மாணவர்களை உற்சாகப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பு ஒன்றில் உனது இலட்சியம் என்ன என்ற கேள்விக்கு ஒரு 10 வயது மாணவியின் பதிலே 1998 ஆம் ஆண்டே 2020 இல் இந்தியா என்ற புதிய ஆயிரமாண்டுக்கான கனவினை வடிக்க காரணமாயிருந்தது என தமது புத்தகத்தை அந்தச் சிறுமிக்கு அர்ப்பணிக்கின்றார். அந்தச் சிறுமி கூறிய பதில் இதுதான். வளர்ந்த இந்தியாவில் வாழ விரும்புகிறேன்.

அதற்கு இன்னும் 22 ஆண்டுகள் உள்ளன என்ற நிலை மாறி அந்த 2020 ஆம் ஆண்டும் புலர்ந்தது. நிச்சயமாக அறிவியல் முன்னேற்றங்களைக் கழித்தால் இந்தியா பின்னோக்கிச் செல்கிறது என்பது நிதர்சனம். இப்பொழுது அந்தக் கனவின் நிலைதான் என்ன? சுதந்திர இந்தியாவில் என்றுமில்லாத அளவிற்கு கலவரங்கள், போராட்டங்கள், அடக்குமுறைகள் ஒடுக்குமுறைகள், பயங்கரவாதம், பயம், பதற்றம், பொருளாதாரத்தில் பின்நகர்வு, வரிகள், கடன்கள், பொதுத்துறைகள் தனியாருக்கு பேரம் பேசப்படும் நிலை, திவாலாகும் கஜானா எனப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. அப்துல் கலாமிற்கு அன்று 69 வயது. அந்தச் சிறுமிக்கு இன்று 32 வயது ஆகிறது. பலரின் கனவுகள் மெய்ப்படுவதில்லை.

இவ்விதழில் இயேசு சபையில் 70 ஆண்டுகள், 60 ஆண்டுகள், 50 ஆண்டுகள் நிரம்பியவர்களைக் கொண்டாடுகின்றோம். அருள்பணியாளர்களாக 50 ஆண்டுகள் 60 ஆண்டுகள் அருள் ஈந்தவர்களை நன்றியோடு நினைவு கூறுகின்றோம். இறையாட்சிக் கனவினை மெய்ப்பித்த தருணங்களை இவர்கள் நமக்கு நினைவுபடுத்துகின்றார்கள். திருத்தந்தை பிரான்சிஸ் இன்றைய இளைஞர்கள் மீது தாம் வைத்திருக்கக்கூடிய அத்தகைய இறையாட்சிக்கான நாளைய நம்பிக்கைக் கனவுகளை நமதாக்க எடுத்துரைக்கின்றார்.

இந்த அறைகூவல் இன்றைய உலகில் சகோதர சகோதரிக்கான துறவற அழைப்பின் சாத்தியக்கூறுகளை அசைபோட்டு அதனை வெறும் கனவாக ஓரங்கட்டாமல் அதனை மெய்ப்பிக்க யூகம் வகுக்க அழைக்கின்றது. புனித அருளானந்தர், விசுவாசநாதர் போன்ற முன்மாதிரியான வாழ்க்கைப் பாடத்தால் நாமும் சாட்சிய வாழ்வு வாழ உத்வேகம் அடைகின்றோம். நம் இயேசு சபை முன்னோர்கள் கிறிஸ்து மேல் கொண்ட அன்பின் பொருட்டு எடுத்த முன்னெடுப்புகள் நம்மை வியக்கவைக்கின்றன. அறிவியலில் ஆழம் கண்டால் ஆன்மாக்களை இறைபதம் ஈர்க்கலாம் என்ற நப்பாசையில் பூச்சிகளின் வகைகளையும் தாவரங்களின் பட்டியல்களையும் வானிலை ஆய்வுகளையும் இவர்கள் மேற்கொண்டனர். இறைப்பணியில் ஆழம் பெற அறிவிலும், ஆன்மிகத்திலும் உணர்வுகளை கையாள்வதிலும் பக்குவம் வேண்டும் என உலகளாவிய இயேசு சபைத்தலைவர் அர்துரோ சோசா மொழிகின்றார்.

வாருங்கள் !!! விடைகளைத் தாண்டி வேரூன்றும் ஞான மீட்பர்களாக, தடைகளைத் தாண்டி சரித்திரம் காணும் நம்பிக்கையுடையோராக, படைகளைத் தாண்டி மாற்றம் கொணரும் எழுச்சி இளையோராக வாழ முற்படுவோம். புனித பவுல் எபேசியருக்கு எழுதிய மடலில் உரைப்பது போல உண்மையை இடைக்கச்சையாகவும் நீதியை மார்புக்கவசமாகவும் அமைதியின் நற்செய்தியை அறிவிக்கும் தயார்நிலையை மதியடியாகவும் நம்பிக்கையைக் கேடயமாகவும் கொண்டு தீயோனின் தீக்கணைகளை எதிர்கொள்வோம் (எபே 6:14,15). இறைப்பணிக்கு தன்னையே இயேசுவழி தியாகமாக்கத் துணிந்தால் வா என் பின்னே வா !!! என்ற இறையழைப்பிற்கு ஆகட்டும் என பதில் மொழிந்திடுவாய். தோள்கொடுக்க களமிறங்குவாய்.

**- புகழ், சே.ச.**

பொருளடக்கம்


| | |
|---|---|
| கொடைக்கானலா கோடைக்கானலா | 3 |
| தியானம் | 5 |
| டீல் No டீல் - 5.0 | 6 |
| இன்றைய உலகில் இறையழைத்தல் | 7 |
| நாளைய நீ | 9 |
| விடியலின் தொடக்கம் - ஆன்மிகப் பயிற்சிகள் | 12 |
| வரலாற்றில் முத்திரை பதித்த முன்னாள் மாணவர்கள் | 13 |
| கோதுமை மணியின் செம்மண் பாதைகள் | 14 |
| MNL செய்தி துளிகள் | 16 |
| மலர்ந்தது மூன்றாம் குழந்தை | 17 |
| என் இறையழைத்தல் | 19 |
| டீல் No டீல் - 4.0 விடைகள் | 21 |
| முன்னாள் மாணவர் மன்றக் கூடுகை 2020 | 22 |
| விசுவாசநாதர் சுவாமிகள் (1799-1840) | 23 |
| துறவற சகோதர அழைப்பு | 25 |
| நினைவேந்தல் | 27 |




## வாசகர் கடிதம்

பல துறை செய்திகள் இந்த இதழில் உள்ளன. பயனுள்ள ஊக்கமூட்டும் செய்திகள் பலவற்றைக் கொண்டதாகவும் உள்ளது.

**- அருள்பணி. K. அமல் சே.ச.** பாளையங்கோட்டை

பாதைகள் இதழை ரசித்து வாசித்தேன் அருமையான பதிவுகள். தொடர்ந்து இப்பேர்ப்பட்ட படைப்புகளை உருவாக்க வாழ்த்துகிறேன்.

**- அருள்சகோதரி. மெட்டி** SCC, திருச்சி

## வாழ்த்து மடல்

இளைஞர் நடுவில் இறையழைத்தல் முன்னிறுத்தும் உங்கள் முயற்சிகளுக்கு எனது வாழ்த்துகளும் பாராட்டுகளும். இந்தப் புத்தாண்டு ஆச்சரியங்களின் ஆண்டவரை அனுபவிக்க உதவிட வேண்டுகிறேன்.



**- மேதகு ஆயர்**
**அந்தோனிசாமி சவரிமுத்து**
பாளை மறைமாவட்டம்


தமிழக இயேசு சபையினரின்

# பாதைகள்

பிப்ரவரி - 2020

பாதை - 36 | பயணம் - 1



ஆசிரியர்

**புகழ் சே.ச.**
பெஸ்கி கல்லூரி
திண்டுக்கல்-624 001
*அலைபேசி : 74483 21477*
*மின்னஞ்சல் :* pugalsj@gmail.com

ஆசிரியர் குழு

**P. ஜோசப் சேவியர் சே.ச.**
**விக்டர் ரோச் சே.ச.**
**பால் பெனடிக்ட் சே.ச.**
**எட்வர்ட் லெனின் சே.ச.**
**T. கிறிஸ்டியன் கீலர்**


**பாதைகள்**
தமிழக இயேசு சபை நண்பர்களுக்கும் அவர்கள் குடும்பத்தார்க்கும் உடன் உழைப்பவர்களுக்கும் சேவைத்துடிப்புள்ள மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் வெளியிடப்படுகிறது.


வெளியீட்டாளர் & மேலாளர்

**அ. ஸ்டீபன்,சே.ச.**
இயக்குநர்
வைகறை பதிப்பகம்
6, மெயின் ரோடு,
திண்டுக்கல் - 624 001
தொலை பேசி. *0451-2430 464*
email:vaigaraibooks@gmail.com
web: www.vaigaraibooks.com


*'**பாதைகள்**' இதழை வாசித்துவிட்டு உங்களுடைய கருத்துகளை ஒரிரு வரிகளில் ஆசிரியரின் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள். உங்களின் பரிந்துரைகள் பாதைகளின் வளர்ச்சிக்கு நிச்சயம் உதவும்.*
*- ஆசிரியர்.*



அமெரிக்காவின் கௌரவ இராணுவ விருது பெற்ற முதல் இயேசுவினர் அருள்பணி ஒக்லாஹன் சே.ச. இரண்டாம் உலகப் போரில் இவரது துணிகரம் விளங்கியது.

# கொடைக்கானலா கோடைக்கானலா?

- நன்றி அருள்பணி பேட்ரிக், அருள்பணி ஸ்டனிஸ்லாஸ்

**வரலாறு :**

பழநி மலைகள் என அழைக்கப்படும் பகுதியில் கொடைக்கானல் அமைந்துள்ளது. சங்ககாலம் தோன்றியே அங்கு மனிதர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் இங்கிருக்கின்றன. மலைகளின் இளவரசி என்று செல்லமாக அழைக்கப்படும் கொடைக்கானல் மலை பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் ஆங்கிலேயருக்கு கோடை கால ஓய்விடமாக இருந்தது. 1852 ஆம் ஆண்டில் இங்கே பத்து தனிநபர்கள் பங்களாக்கள் அமைத்து தங்கியிருந்தனர். இந்த ஆண்டு 2020 செண்பகனூர் குழுமத்திற்கு ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஆண்டு இந்த இல்லம் தொடங்கப்பட்ட 125 ஆவது ஆண்டையும் அருங்காட்சியகம் ஏற்படுத்தப்பட்ட 100 ஆவது ஆண்டையும் செண்பகனூர் சமூக சேவை அமைப்பு தொடங்கப்பட்ட 50 ஆவது ஆண்டையும் கொண்டாடுகின்றது.

**திரு இருதயக் கல்லூரி :**

வெளிநாடுகளிலிருந்து வரும் உற்சாகமான இளம் மறைப்பணியாளர்கள் தமிழ்நாட்டின் வெப்பத்தினாலும் தொற்று நோய்களினாலும் பெருமளவில் இறக்கும் நிலை மதுரை மறைப்பணித்தளததிற்கு மிகப்பெரிய இழப்பாகக் கருதப்பட்டது. கானோஸ் ஆண்டவரின் பரிந்துரைபேரில் குருமாணவர்களின் பயிற்சித்தளத்திற்காக வெப்பம் குறைந்த இடம் ஒன்றை தேட தொடங்கினர். அருள்பணி சான்ட்சீர், பேய்னஸ் என்பவரிடமிருந்து La Providence என்ற பங்களாவை 2500 ரூபாய்க்கு வாங்கினார். அன்னை மரியாவின் பரிந்துரையால் தான் பெற்ற உடல்நலத்தின் பொருட்டுதான் நேர்ந்தது போலவே 1865 இல் சலேத் மாதாவிற்கு ஓர் ஆலயம் எழுப்பினார். அவரே பிற்காலத்தில் இயேசு சபை மாநிலத்தின் பார்வையாளராக இருந்த காரணத்தினாலே செண்பகனூர் பகுதியில் நிலம் வாங்கினார். இளவல்களுக்குப் படிப்பதற்கு ஏற்ற ஒரு பயிற்சியகம் அமைக்க இவ்விடமே தேர்ந்தெடுக்கப்பட்டது.

1895 ஆம் ஆண்டில் திருஇருதயக் கல்லூரி செயல்படத் தொடங்கியது. இன்று கொடைக்கானலில் இதை போன்ற ஒரு மாபெரும் கட்டடம் எழுப்புவது ஒரு சாதாரண காரியமாக இருக்கலாம் ஆனால் அன்று 125 ஆண்டுகளுக்கு முன்னர் ஒழுங்கான சாலை வசதிகூட இல்லாத வேளையில் உண்மையாகவே பலரின் உழைப்பால் உயர்ந்த கட்டடமே அது. கழுதைகள் குதிரைகளின் துணைகொண்டு பெரியகுளத்திலிருந்தும் திண்டுக்கலில் இருந்தும் கட்டடத்திற்குத் தேவையான பொருள்கள் கொண்டுவரப்பட்டன. 20 அடி இரும்பு தூண்கள் போன்றவற்றை எவ்வாறு மேலே கொண்டுவந்தார்கள் என நம்மை இன்றும் வியக்கவைக்கின்றது.

தூய இருதயக் கல்லூரி சென்னை பல்கலைகழகத்தைச் சார்ந்த ஒரு கல்லூரியாக இயங்கி தத்துவவியல் துறையில் MA பட்டம் வழங்கப்பட்டது.

ஏறக்குறைய 214 இயேசுவினரோடு தேன்கூடு போல பரவசத்துடன் காணப்பட்ட கல்லூரி இன்று அமைதியான தியானத்திடலாக மாறிவிட்டது. இன்று இந்தக் கல்லூரி தனது 125 ஆவது அகவையை எட்டியுள்ளது. செண்பகனூரில் தங்களது பயிற்சினை செய்தவர்களுக்கு வேறு எங்கு சென்றாலும் அதுவே தாய்வீடு. சாமி மலை ஏறினால் 7 வருடம் என்று நாம் கூறுவது இங்கே சாலப்பொருந்தும். நவதுறவறம் இரண்டு ஆண்டுகள். இளந்துறவறம் இரண்டு ஆண்டுகள். தத்துவவியல் மூன்று ஆண்டுகள்.

செண்பகனூரில் இந்தியாவெங்கும் இருந்து குருமாணவர்கள் வந்ததால் தலைசிறந்த போராசிரியர்களே பாடம் எடுத்தனர். இந்திய மாணவர்களுக்கு ஆங்கிலம், இலத்தின், போன்றவற்றை மேலைநாட்டவரிடமிருந்தே கற்றுக்கொள்வது பெரும் உற்சாகத்தைக் கொடுத்தது. எனினும் செண்பகனூர் சிறந்ததொரு பயிற்சிப் பாசறையாக விளங்கிற்று. ஏனெனில் ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பது ஒருபுறமிருக்க அந்த இயற்கை எழிலும் பசுமை வளமும்



அருள்பணி ஸ்டிபன் பெரி சே.ச. (1833–1889) புவிகாந்தக ஈர்ப்புவிசை மற்றும் சூரிய கரும்புள்ளிகள் சார்ந்த ஆய்வில் பெரிதும் உதவினார்.

நடைப்பயணங்களும் சலேத் மாதா ஆலயத்திற்கான திருயாத்திரைகளும் அன்பிலும், பண்பிலும் ஆன்மிகத்திலும் இளம் உள்ளங்களை வளர்த்தெடுத்தன. மலையிலிருந்து நவதுறவறம் திண்டுக்கல் பெஸ்கி இல்லத்திற்கும் (1954) தத்துவவியல் தெ நொபிலி கல்லூரி, புனேவிற்கும் (1952), சென்னை சத்திய நிலையத்திற்கும் (1980) மாற்றப்பட்டது.

**அருங்காட்சியகம் :**

கொடைக்கானலுக்கு வருகை தரும் பயணிகளின் கண்களுக்கு இது பரவசமூட்டும் இளைப்பாறுதல். இந்த அருங்காட்சியகத்தை உருவாக்க பலரும் உதவி புரிந்திருந்தாலும் இதற்கு வித்திட்டு உயர்ந்த பழ மரமாக வாழ வைத்தவர் அருள்பணி அலோசியூஸ் ஆங்கிலாடு அடிகள். இவரது அயராத உழைப்பினாலும் திரு இருதயக் கல்லூரியின் ஆசிரியர்கள் இளம் மாணவர்கள் இவர்களது பெரும் முயற்சியினாலும் பூத்து சிரிப்பது இவ்வருங்காட்சியகம்.



காடுகளை ஆய்வு செய்கையில் டால்மென் எனப்படும் பூர்வீகக் குடியின் குகைகள், முதுமக்கள் தாழி மற்றும் பானை ஓடுகள் போன்ற தொன்மையான பொருட்களைச் சேகரித்தனர். இதுவே 100 ஆண்டு பழமையான நமது பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் கட்டிக்காக்கும் ஆவணங்களாக இன்றும் விளங்குகின்றன.

மலையின் மீது அமைக்கப்பட்ட இடம் ஆதலால் தன்னிறைவான ஓர் இல்லமாக இது விளங்க வேண்டும் என்று முன்னோர் எண்ணினர். இதனால் மின்சாரம், தபால், காய்கறிகள், இறைச்சி, பழங்கள் என அனைத்தும் இங்கேயே உற்பத்தி செய்யப்பட்டன.

**சிறப்பம்சங்கள் :**

★ இயேசு சபையாளருக்கு வழங்கப்படும் பயிற்சி வெறும் பாடங்களைப் பரிமாறுவது மட்டும் அன்று அது அனுபவங்களை ஊற்றெடுக்கச் செய்து அதன்வழி ஞானத்தையும் சுரக்கச் செய்கிறது. செண்பகனூர் சமூக சேவை (Shenbaganur Social Service SSS) என்ற அமைப்பு (1952) தொடங்கப்பட்ட 50 ஆவது ஆண்டு இது. மக்களைச் சந்திக்க நல்லொழுக்கங்களைக் கற்பிக்க இது தொடங்கப்பட்டது.

★ 1980 களில் தொழிற்சாலைகள் காடுகளை அழிக்கவும் இயந்திரங்கள் வேலைவாய்ப்பை ஒழிக்கவும் முற்பட்ட காலத்தில் இயற்கை பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு சார்ந்த வகுப்புகள் பள்ளி மாணவர்களுக்கு அருள்பணி K.M. மேத்தியு அவர்களால் எடுக்கப்பட்டன.

★ பல்லாயிரக்கணக்கான தாவர வகைகள் பட்டியலிடப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

★ 1863 இல் கொடைக்கானலின் எழில்மிகு ஏரியை வடிவமைத்தவர் செசிரோன் என்ற இயேசுசபை அருள்சகோதரர். அங்குள்ள 33 ஊற்றுகளையும் இணைக்கும் வண்ணமாய் அதனை வடிவமைத்தார்.

★ 1920 இல் இங்கே அஞ்சலகம் செயல்படத் தொடங்கியது. 1980 களில் சிறந்த தபால் நிலையத்திற்கான விருதையும் 1983 ஆம் ஆண்டு சிறந்த பொருப்பாளராக அருள்சகோதரர் பீட்டர் அவர்களுக்கு பத்ம ஸ்ரீ விருதும் வழங்கப்பட்டது.

★ இயேசு சபை மதுரை மாநிலத்தின் ஆவணக்காப்பகம் செண்பகனூருக்கு மாற்றப்பட்டது. பல வரலாற்று துறவற ஆய்வுகளுக்கு ஆதாரங்களைத் திரட்ட விரும்புவோர் இதனை தகுந்த மரியாதையுடன் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

செண்பகனூர் வாருங்கள். பழமையைக் கண்டு புதுமையைப் புதுப்பிக்க வாருங்கள். பழங்களைக் உண்டு உடலுக்குப் புத்துயிரூட்ட வாருங்கள். இயற்கை வளமையைக் கண்டு உயிருக்கு ஊட்டமளிக்க வாருங்கள். ஆவணங்களில் பொதிந்திருக்கும் வரலாற்றை கண்டு களிகூற வாருங்கள். வாருங்கள் வந்து பாருங்கள்இனிமையைச் சுவைத்து மகிழுங்கள்.



அந்தோனியோ ரூபினோ சே.ச. (1578–1643) முதன் முதலில் இந்தியாவில் தொலைநோக்கு கருவியை 1613 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தினார்.

# தியானம்

- **சாம் அலெக்சாண்டர்,** இயேசு சபை நவதுறவி

ஒரு மாத தியானம். அது ஒரு மறக்க முடியாத பயணம். ஆண்டவரோடு பயணித்த ஒரு பயணம். அமைதியில் ஆண்டவரின் துணையோடு மேற்கொண்ட ஓர் அகப் பயணம். ஆண்டவரின் அன்பை உணர்ந்து, அனுபவித்து, அவர் தந்த அருளின் மூலம் ஆவிகளை ஆய்ந்து அறிந்து அகத்தை மாற்றியமைத்த ஒரு ஆன்மிகப் பயணம் அது. பயணம் முடிந்தது என்று நினைத்து வருந்தியபோது ஆண்டவர் கூறியது. இதோ வாழ்க்கையில் நீ மேற்கொள்ளவிருக்கும் புதிய அன்பு நிறைந்த பயணம், பயணி என்னுடன் வா..

என்னைப் பொறுத்த வரையில் ஆன்மிகப் பயிற்சிகள் வாழ்க்கை முறையையும், மனிதனின் மனதையும் மாற்றி அமைக்கும் ஒரு புதையல். கடவுள் விரும்புவதை செய்ய உதவும் ஒரு கருவி.

என்னையும், என் மன நிலையையும், என் வாழ்க்கை முறையையும் மாற்றியது இந்த ஆன்மிகப் பயிற்சிகள்தான். நான் செய்த தியானங்கள் என்னை செதுக்கின. நான் பெற்ற அனுபவங்களோ ஏராளம். சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

1) நான் செய்த முதல் தியானம் (1.0). அன்று இயேசு என்னிடத்தில் கேட்ட கேள்வி, உனக்கு தான் வேண்டும் என்றால் கதவைத் திற.

இந்தக் கேள்வி, என் ஆண்டவர் எப்பொழுதும் என் அருகில், என் மனக்கதவின் முன் நின்று எனது விருப்பத்தை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறார் என்ற உணர்வைத் தந்தது.

என் ஆண்டவர் இயேசு என்னோடு இருக்கிறார். இது நான் உணர்ந்து அனுபவித்த முதல் அனுபவம்.

இரண்டாவது மற்றும் மூன்றாவது நாள் நான் செய்த தியானங்களில் நன்றியுணர்வால் ஆச்சரியத்தால் ஆறுபோல் பெருக்கெடுத்து வந்தது கண்ணீர். கடவுள் என்மீது கொண்டுள்ள நிகரற்ற எல்லையில்லா உண்மையான என்றுமுள அன்பை உணர்ந்து ருசித்து மகிழ்ந்த நாள்கள்.

எனது பெற்றோர் என்மீது கொண்டுள்ள அன்பையும் அவ்வாறே உணர்ந்து அனுபவித்த தருணம் அது.

அன்று நான் உணர்ந்து அனுபவித்த அந்த அன்பே தியானத்தின் இறுதிவரை எனக்கு சவாலாக இருந்த அனைத்து சோதனைகளையும் கடந்து வெற்றிபெறச் செய்து என்னையே ஒரு புதிய படைப்பாக மாற்றியது.

மூன்றாவது மூவகை தாழ்ச்சி மற்றும் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய உள்ளார்ந்த அறிவு பெற நான் செய்த தியானங்கள் மற்றும் இறையன்பை அடைய நான் செய்த காட்சிதியானமும் என்னை நன்றியுணர்வு கொண்ட மனிதனாக மாற்றியது.

இயேசுவே எனக்கு எல்லாம்-அவர் மட்டும் போதும் என்ற உணர்வையும் பொய்யான அன்பிற்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த எனது மனநிலையையும் அழித்தது.

நான்காவதாக: நான் ஆசிர்வதிக்கப்பட்டுள்ளவன் என்னுடைய அருள் ஆசிர்வாதங்களை எண்ணி மகிழ்ச்சியால் என்னை நிரப்ப உதவிய ஒரு கருவியாகவும் இருந்தது.

ஐந்தாவதாக: இறை நம்பிக்கையிலும் நற்கருணை மீதுள்ள நம்பிக்கையையும் ஆழப்படுத்தியது அசைக்கமுடியாத ஒன்றாக மாற்றியது. என் பெற்றோர் மீது நான் கொண்டிருந்த அன்பையும் ஆழப்படுத்தியது. அனைத்திற்கும் மேலாக கிறிஸ்து இயேசுவின் மீதுள்ள அன்பையும் ஆழப்படுத்தியது.

என் நண்பர்களின் பாதத்தை கழுவியபோது கிறிஸ்துவைப் பிரதிபளிக்கின்றேன் என்ற உணர்வு நிகரில்லா மகிழ்ச்சியைத் தந்தது. இறுதியில் நான் கேட்ட என் மனதின் குரல் இயேசு இல்லாமல் நான் இல்லை.இது நான் பெற்ற அனுபவங்களுள் சிறப்பு பெற்றவை.



ஜோஸ் மரிய அல்கு சே.ச.(1856–1930) கண்டுபிடித்த நிலஅதிர்வு கருவி பல்லுயிரைக் காப்பாற்ற துணை நின்றது.



# டீல் – No – டீல் - 5.0
# Deal – நோ - Deal – 5.0



*பாதைகள் வாசகர் அனைவருக்கும் அரிய வாய்ப்பு!*
*இந்தப் புத்தகத்தை அறிய வாய்ப்பு!*

- ✷ கீழ்க்காணும் கேள்விகளுக்கான சரியான பதில்களைக் கண்டறிந்து விடை அளியுங்கள்; பரிசுகளை வெல்லுங்கள்.
- ✷ வேறெங்கும் தேட வேண்டாம். அனைத்துக் கேள்விகளும் **பாதைகள் பிப்ரவரி 2020 இதழில்** இருந்தே கேட்கப்பட்டுள்ளன.
- ✷ சரியான விடை எழுதும் அனைவருக்கும் பரிசுகள் உள்ளன.
- ✷ **விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 30.06. 2020.**
- ✷ பதில் எழுதும் போது இந்தப் புத்தகத்தின் பக்க எண்ணையும் குறிப்பிடத் தவறாதீர்கள்.

**பதில் தருக :** (2x4=8)

1. இயேசு சபை மீதிருந்தத் தடை எந்த வருடம் நீக்கப்பட்டது?
2. இயேசு சபையில் அருள் சகோதரர்களைச் சேர்க்கலாம் என ஒப்புதல் வழங்கிய ஆணையின் பெயர் என்ன?
3. எந்த தலைப்பில் 2020 – முன்னாள் மாணவர் மன்றக் கூடுகை நடைபெற்றது?
4. திரு இருதய சகோதரர்கள் சபையின் நோக்கம் என்ன?



**பொருத்துக.** (5x1=5)

| | | | |
|---|---|---|---|
| 1. | ப்ரௌன் | – | சலேத் மாதா |
| 2. | கௌசானல் | – | விசுவாசநாதர் |
| 3. | அருப்பே | – | கமரூன் |
| 4. | மார்ட்டின் | – | இறையடியார் |
| 5. | சான்ட்சீர் | – | ஆஞ்சலோ |

**பதில் தருக :** (3x4=12)

1. திருத்தந்தை நாளைய நீ என்ற உரையில் கூறும் மூன்று செய்திகள் எவை?
2. புனித அருளானந்தர் வாழ்வில் உனக்கு பிடித்த புதுமை எது?
3. இந்த இதழில் உனக்கு பிடித்த மூன்று விவிலிய குறிப்புகளை எடுத்து எழுதுக.
4. இந்த இதழின் பின் அட்டையில் எத்தனை இயேசு சபை புனிதர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன?

- ✷ இந்த இதழில் நீங்கள் கண்டுபிடிக்கும் ஒவ்வொரு சொற்பிழைக்கும் கூடுதல் 1 மதிப்பெண் வழங்கப்படும்.
- ✷ இந்த இதழுக்கு வாசகர் கடிதம் எழுதினால் 3 – 5 மதிப்பெண் வழங்கப்படும்.

**பதில்களை 02–ஆம் பக்கம் உள்ள இதழ் ஆசிரியர் முகவரிக்கு அனுப்பவும்**

**கடந்த இதழ் வினாக்களுக்கான பதில்கள் 21–ஆம் பக்கத்தில்...**



சுவிட்சர்லாந்து நாட்டை சார்ந்த எதெல்பர்ட் ப்லாட்டர் சே.ச. (1877–1934) என்பவரின் பெரும் முயற்சியால் மும்பையில் 30 இலட்சம் செடி வகைகள் உள்ளடக்கிய அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது.

# இன்றைய உலகில் இறையழைத்தல்

- அருள்சகோதரி அமுதா SCC

அழைப்பு, இதன் மறுபதிப்பே விழிப்பு. இது உறவுகளை ஊக்குவிக்கும் ஓர் உற்சாக மருந்து. கருவறை தொடங்கி கல்லறை வரை எல்லோரும் ஏதோ ஓர் அழைப்பினை தினம் தினம் எதிர்கொள்கிறோம். சில அழைப்புகள் நம்மை அச்சம் கொள்ளச் செய்யலாம்: சில பாசம் பகிரச் செய்யலாம்: அன்பை பரிமாறலாம்: ஆசையை எடுத்துரைக்கலாம்: சுமையைக் குறைக்கலாம்: சோகத்தைப் பகிரலாம்: கவலையை எதிரொலிக்கலாம்: காயங்களுக்கு மருந்தாகலாம்: ஒவ்வொர் அழைப்பிற்கும் ஒரு தனித்தன்மை உண்டு. நமது தனிப்பட்ட அழைப்பை உணர உதவுவதே கல்வி. விஞ்ஞானிகள் கல்வியாளர்கள் சமூகப் போராளிகள் பெற்றோர்கள் என நமது அழைப்பினை இனம் கண்டுகொள்ள நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.





**இறையழைப்பு:**

எல்லா சக்தியையும் தன்னுள் கொண்ட, பிரபஞ்சம் காக்கும் இறைவனும் கூட மனிதனுக்கு அழைப்புவிடுகிறார். இறைவனின் கனவுகள் மனிதனில் செயலாக்கம் பெற இறைவனின் அழைப்பு உதவுகிறது. விவிலியம் தொடங்கி எல்லா மறைநூல்களிலும் பலதரப்பட்ட மனிதர்களுக்கும் பல்வேறு நிகழ்வுகளின் வாயிலாக இறையழைப்பு உணர்த்தப்படுகிறது. எரியும் முற்புதரோ கரையும் மண்வளமோ அழியும் மானுடமோ சிதையும் இறைமையோ ஏதோ ஒன்று இறையழைப்பை உரக்க உரைக்கின்றது. இறையழைத்தல் மனிதனுக்கான இறைவனின் கனவா, இறைவனுக்கான மனிதனின் கனவா? இவ்வழைப்பின் வாயிலாக மனிதன் இறைவனில் புனிதம் அடைகிறார். இறைவன் மனிதனில் நிறைவு அடைகிறார்.

**இறையழைத்தல் எக்காலத்திற்கும் பொருந்துமா?**

இறைவன் மாற்றங்களின் படைப்பாளி
மனிதன் புதுமைகள் படைக்கும் பங்காளி
இயற்கை இவர்களின் பாடசாலை

இயற்கையோ இறைவனோ மனிதனோ தேக்கத்தன்மைக்கு அப்பாற்பட்டவர்கள். ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கப்பட்டு இயங்கிக்கொண்டே இருப்பவர்கள். புதுமையே வளர்ச்சி; வளர்ச்சியே மாற்றம். இந்த மாற்றம் ஒருங்கிணைந்த மாற்றமாக (Holistic Change) உருவெடுக்க மனிதன் வாயிலாக இறைவன் அளிக்கும் மிகப்பெரிய வரமே இறையழைத்தல். பலரின் இறையழைத்தல் மூலம் இச்சமுதாயம் ஏராளமான முன்னேற்றங்களை எட்டியிருப்பது கண்கூடு. எனினும் இந்நவீன யுகத்தில் இறையழைத்தல் என்பது தேவையான ஒன்றா என்ற எண்ணம் பலரிடையே எழுகின்றது.

இறைவனும் மனிதனும் இவ்வுலகில் நிலைத்திருக்கும் வரை இறையழைத்தலும் மகத்தான சக்தி கொண்டு உயிர்த்தெழுந்து கொண்டேதான் இருக்கும். மானிட சமுதாயத்தின் அடிப்படை நெறிகளான அன்பு சமத்துவம், ஆன்மிகம், அரசியல், சுதந்திரம் போன்ற பல பரிணாமங்களை பண்பட்ட முறையில் உலகிற்கு உணர்த்த இறையழைத்தல் கட்டாயம் தேவை.



ரோஜர் பாஸ்கோவிச் சே.ச. (1711–1787) என்ற இயற்பியல் அறிஞரின் ஆராய்ச்சிகளின் விளைவாகவே அனு கோட்பாடு, வெப்பம், காந்தகம், மின்சாரம் போன்ற அறிவியல் வளர்ச்சிகள் சாத்தியமாயின.



மாறிவரும் கலாச்சார உலகம் சீராக நிலைபெறாத தருணங்களில் இறையழைப்பிற்கு செவிமடுக்கும் எண்ணம் சற்று தொய்வடையுமே அன்றி ஒருநாளும் முற்றுப் பெறாது.

**இன்று இறையழைத்தலின் அவசியம் :**

செய்து முடிக்கப்பட்ட ஒரு பொருளுக்கு படைப்பாளி தேவையில்லை. இன்னும் செய்ய வேண்டிய பொருளுக்கே படைப்பாளி தேவை. நம் சமுதாயம் இன்று இரண்டாம் நிலையில் உள்ளது. நம்மிடையே கொணரப்பட வேண்டிய மாற்றங்கள் ஏராளம்.

❖ யார் பிடியில் நாம் அகப்பட்டுக்கிடக்கிறோம் என்றே பகுத்தறியத் தெரியாத பாமர மக்கள்.

❖ பணத்தையும் பதவியையும் எட்டிப்பிடிக்க எதையும் செய்யலாம் என சித்தரிக்கும் அரசியல்.

❖ எதற்காக ஓடுகிறோம் என்றே தெரியாமல் இயந்திரமாய் மாறி பொருள் சேர்க்கும் உழைப்பேறிகள்.

❖ சிந்தனையை மழுங்கடித்து, நேரத்தை அபகரித்து, காண்பவற்றை நம்பச்செய்து, இதுதான் புத்துலகம் என அணி செய்யும் ஊடகம்.

❖ உணவைக் கெடுத்து, உடையைக் கிழித்து, உறவைக் கழிக்கும் மாய உல்லாசத்தில் மயங்கித் திரியும் மாநகரவாதிகள்.

❖ மேலும் அறிந்தும் அறியாமலும் நிலவும் சிக்கல்கள் பற்பல.

இவ்வாறு வளர்ச்சிப் பாதை என நினைத்து அசுர வேகத்தில் மனிதன் சிறகு விரித்துப் பறந்தாலும், பெரும்பாலானோர் மனங்களில் ஓர் இனம் புரியாத பயம், நிரந்தரமான வெறுமை குடிகொண்டுள்ளது. மனிதன் முன்னேற்றம் என்ற கயிற்றினை வெகுவாய் பற்றிக்கொண்டு வேகமாய் முன் சென்றுக் கொண்டிருக்கிறான். உண்மைதான் ஆனால் அவன் வளர்ச்சிக்கு மகுடம் சேர்க்கும் மனிதம் பின்னே தங்கிவிட்டது.

**எது வேண்டும்?**

தற்சமயம் இறைவனைப் பிரிந்து நாம் வெகுதொலைவு சென்று கொண்டிருக்கிறோம். இறைசாயலில் படைக்கப்பட்டுள்ள நாம் நம்மிடம் உள்ள இறைமையை மறந்துவிட்டோம். அதை வெளிப்படுத்தும் சாத்தியக் கூறுகளையும் புறக்கணித்துவிட்டோம்.

எதை எதையோ சாதிக்கும் நாம் அன்பு, மனிதாபிமானம் போன்ற அடிப்படை பண்புகளை வெற்றிக் கொள்ளத் தெரியாதவர்களாய் உணர்ச்சிகளில் சமநிலையற்று பெரும்பாலான நேரங்களில் மனநலம் குன்றியவர்களாய் நடந்து கொள்கிறோம்.

**நீ தயாரா?**

மாற்றங்கள் நிச்சயம் தேவை என்ற கட்டாயத்தின் கடைநிலைக்கு வந்துவிட்டோம். மனிதனில் குடிகொண்டிருக்கும் இறைத்தன்மை மீட்டுக்கொணரப்பட வேண்டும்.

எனவே மனிதன் செல்கின்ற பாதையில் வெளிச்சம் கொணர தற்போதைய வாழ்வு நிலையை சீர்த்தூக்கிப் பார்க்க, நிலையான நிறைவான வாழ்வை உணர்ந்து கொள்ள நம் புனிதர்களைப் போல இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி வாழ்ந்து வழிகாட்டும் ஆன்மிகத் தலைவர்கள் இன்றைய உலகிற்கு தேவை.

இறைஅன்பை எடுத்துக் கூறும் தன்னலமற்ற, துணிச்சல்மிக்க முன்மாதிரியான இளைஞர்களையும் இளம் பெண்களையும் இவ்வுலகம் எதிர்பார்த்து காத்துக்கிடக்கிறது.

எப்படியோ வாழ்ந்தோம். எங்கோ வீழ்ந்தோம் என இல்லாமல் பலரின் நலவாழ்வுக்காய் தங்களையே அர்ப்பணமாக்கி நம் தலைவர் இயேசுவின் உடனிருப்பில் உறுதி கொண்டு சவாலான சாட்சிய வாழ்வு வாழ இன்றைய இளவல்கள் அழைக்கப்படுகின்றனர்.





ஜான் பட்டிஸ்டா பிரமொலி சே.ச. (1673–1747) என்ற அருள்சகோதரரின் திரனால் அர்ஜன்டீனாவில் பல புகழ்பெற்ற ஆலயங்கள் எழுப்பப்பட்டன.

# நாளைய நீ

## 2017 ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் TED நிகழ்ச்சியில் ஆற்றிய 18 நிமிட உரையின் சுருக்கம்.

- **தமிழில். அருள்பணி. யூஜின் முத்து சே.ச.** இராணிப்பேட்டை, வேலூர்

'நாளைய நீ' என்கின்ற இந்த மாநாட்டின் தலைப்பு எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றது. ஏனென்றால், இது நாளையைக் கவனத்தில் கொண்டு, நீ இன்றைக்கே உன் வழியாக ஒரு எதிர்காலத்தைக் காண்பதற்காக, ஒரு உரையாடலில் ஈடுபடுவதற்கான அழைப்பைக் கொடுக்கின்றது. எதிர்காலத்தில் நீ: எதிர்காலமே நீ என்பதால் கட்டமைக்கப்படுகின்றது. எதிர்காலம் சந்திப்புகளால்தான் சாத்தியமாகிறது. ஏனென்றால் நம் வாழ்வு ஒவ்வொருவரும் பிறரோடு கொள்ளும் உறவால்தான் தொடர்ந்து வழிந்தோடுகின்றது.

நோய்வாய்ப்பட்டவர்கள், கொடுமையான துன்பங்களை எதிர்கொள்ளும் புலம்பெயர்ந்தவர்கள், தங்கள் இதயத்தின் ஆழத்தில் நரகவேதனையை சுமந்து திரியும் சிறைக்கைதிகள், வேலை தேடிக் கண்டுபிடிக்க முடியாத எண்ணற்ற இளைஞர்கள் ஆகியவர்களை நான் சந்திக்கின்ற போது, பல நேரங்களில் எனக்கில்லாமல் அவர்களுக்கு மட்டும் ஏன் இப்படி? என்று மலைப்பதுண்டு.



நானும் ஒரு புலம்பெயர்ந்தவரின் குடும்பத்தில்தான் பிறந்தேன். ஒன்றும் இல்லாமல் ஊரைவிட்டு அர்ஜென்டினாவில் போய்ப் பிழைக்கலாம் என்று கிளம்பிய எத்தனையோ இத்தாலியர்களைப் போல என் அப்பா, தாத்தா, பாட்டி எல்லோரும், கிளம்பி பிறகு ஒன்றும் இல்லாமல் போனார்கள். நானும் இன்றைக்குப் புறந்தள்ளப்பட்ட மக்களுள் ஒருவனாக ஆகியிருக்கலாம். அதனால்தான், எனது இதயத்தின் ஆழத்தில் இருந்து நான் எப்போதும் என்னையே கேட்டுக்கொள்கிறேன்: எனக்கில்லாமல் அவர்களுக்கு மட்டும் ஏன் இப்படி?

நாம் எல்லோருமே மற்றவர்களைச் சார்ந்தவர்கள் என்பதை இந்தக் கூட்டம் நமக்கு நினைவூட்ட வேண்டும் என்பதுதான் என் முதல் ஆசை. மனித உறவின் இணைப்புகளையெல்லாம் நல்ல நிலைக்கு மீட்டெடுக்க வேண்டும். எனது சகோதரன் அல்லது சகோதரிக்கு எதிராக நான் என் உள்ளத்தில் கொண்டிருக்கும் ஆறாத காயம், மன்னிக்கப்படாத தீச்செயல், என்னையே சுட்டெரிக்கும் வெறுப்பு இவையெல்லாம் நான் சுமந்து திரியும் போர்க்களங்கள், எனது இதயத்தின் ஆழத்தில் கனன்று எரியும் நெருப்பு, அது கொழுந்துவிட்டு எரிந்து எல்லாவற்றையும் தீய்த்துச் சாம்பலை மட்டும் விட்டுச்செல்வதற்கு முன்பாக அதை அணைக்க வேண்டும்.

நம்மில் பலர் மகிழ்ச்சியான எதிர்காலம் என்பது எட்டாக்கனியென்று, நம்புகின்றோம். ஒவ்வொரு பகுதியும் அதன் தொகுதியோடு இசைந்து செயல்படுவதன் விளைவாக வெளிப்படும் கொடையாக மகிழ்ச்சி கண்டுபிடிக்கப்படுகின்றது.

இது எனது இரண்டாவது செய்திக்கு இட்டுச்செல்கிறது. அறிவியல் வளர்ச்சியும், தொழில்நுட்பப் புதுப்படைப்புகளும் சமத்துவத்தையும், எவரையும் புறந்தள்ளாது அரவணைத்துக்கொள்ளும் சூழலையும் உருவாக்கினால் எவ்வளவு அருமையாக இருக்கும்! எங்கோ விண்வெளியில் கோள்களைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கின்ற நாம், நம்மைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிக்கின்ற சகோதர சகோதரிகள் ஒவ்வொருவரும் நமது வாழ்விற்கு ஏதோ ஒருவகையில் தேவையானவர்கள் என்பதை நாம் கண்டுணர்ந்துகொண்டால் எவ்வளவு அருமையாக இருக்கும்!



புனித இஞ்ஞாசியார் பலமுறை திருப்பலியின்போது சூரிய வடிவில் இயேசுவைக் கண்டார் அதுவே இயேசு சபை முத்திரையில் சூரிய கதிரும் அதன் நடுவில் இயேசுவின் நாமமும் எழ காரணமாயிற்று.

தோழமை என்னும் சொல், வெறும் சமூக சேவை என்று சுருங்கிவிடாமல், நமது அரசியல், பொருளாதாரம், அறிவியல் செயல்பாடுகளுக்கான அடிப்படை மனநிலையாக இயங்கினால், தனிநபர்கள், மக்கள், நாடுகள் ஆகியவற்றிற்கு இடையேயான உறவுகளின் அடித்தளமாக விளங்கினால் எவ்வளவு அருமையாக இருக்கும்!

அடுத்திருப்பவர் வெறும் எண்ணிக்கையோ அல்லது புள்ளிவிபரமோ இல்லை என்பதை ஒருவருக்கொருவர் நினைவூட்டிக் கொள்வோம். அடுத்திருப்பவருக்கு ஒரு அடையாளம் இருக்கின்றது. நம்மைச் சூழ்ந்து வாழ்கின்றவர்களில் மற்றவர்களைக் கண்டும் காணாமல் வாழந்துவிட்டுப் போவோம் என்று எண்ணுகின்றவர்களையும் மற்றவர்களை அக்கறையோடு கவனித்துக் கொள்கிறவர்களையும் வேறுபடுத்திப் புரிந்துகொள்வதற்கு நமக்கு உதவுவதற்காக இயேசு சொல்லிய உவமை ஒன்று இருக்கின்றது. நீங்கள் நிச்சயம் இந்தக் கதையை ஏற்கெனவே கேள்விப்பட்டிருப்பீர்கள். அதுதான் நல்ல சமாரியன் கதை. இயேசுவிடம் என் அயலார் யார்? அதாவது நான் யாரைக் கவனித்துக்கொள்ள வேண்டும்? என்று கேட்டபோது, அவர் ஒரு மண்சாலையிலே வழிமறிக்கப்பட்டு, தாக்கிக் கொள்ளையடிக்கப்பட்டு, அடித்து நொறுக்கப்பட்டுக்கிடந்த ஒரு மனிதனைப் பற்றிய இந்தக் கதையைச் சொன்னார்.

நல்ல சமாரியன் கதை இன்றைய மானுடத்தின் கதை. பணத்தையும் பொருளையும் மட்டுமே தேடும் இன்றைய மக்களின் வாழ்க்கைப் பாதையில் துன்ப துயரங்கள் கல்லும் முள்ளுமாய்க் காயப்படுத்துகின்றன. தங்களையே மரியாதைக்குரியவர்களாகக் கருதிக்கொள்பவர்களிடம் இன்று ஒரு பழக்கம் பெருகிவருகின்றது. அடுத்தவரைப்பற்றி அக்கறைகொள்ளாது இருக்கும் பழக்கம். அதனால் ஆயிரக்கணக்கான மனிதர்கள், அல்லது கொத்துக் கொத்தாய் மக்கள் ஊர்கள், நகரங்கள் நாடுகள் என்று ஒட்டுமொத்தமாகச் சாலை ஓரங்களில் வீசிஎறியப்பட்டவர்களாய்க் கிடக்கின்றார்கள். நல்லவேளையாக, அடுத்திருப்பவர்கள் மீது அக்கறை காட்டுகின்ற ஒரு புதிய உலகத்தை உருவாக்கிக்கொண்டிருக்கின்றவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். அதற்கு தங்கள் சொந்தப் பணத்தையே எடுத்துச் செலவிடுகின்றார்கள். தங்களுக்குரியதை செலவிடாமல் யாரும் யாரையும் அன்புசெய்ய முடியாது என்று அன்னைத் தெரசா அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.



நாம் செய்யவேண்டிய காரியங்கள் நிறைய இருக்கின்றன. அவற்றை நாம் இணைந்து செய்தாகவேண்டும். ஒவ்வொரு நாளும் தீமையை சுவாசிக்கின்ற நாம் எவ்வாறு இதனைச் செய்யமுடியும்? நிச்சயமாக, இவையெல்லாம் அழகான வார்த்தைகள்தாம், ஆனால் நான் ஒன்றும் நல்ல சமாரியரும் இல்லை அன்னைத் தெரசாவும் இல்லை என்று நீங்கள் சொல்லலாம். எது எப்படி இருந்தாலும் சரி, நாம் ஒவ்வொருவரும் விலையேறப்பட்டவர்கள். கடவுளின் பார்வையில் நாம் ஒவ்வொருவரும் இன்றியமையாதவர்கள். இன்றைய இருள்படர்ந்த சிக்கல்களுக்கு இடையில், நாம் ஒவ்வொருவரும் மெழுகுதிரியாய் சுடர்விட்டு எரிவோம், இந்த ஒளி இருளை வெல்லுமே தவிர அது ஒருபோதும் அதற்கு மாறாக நிகழாது என்பதை நமக்கு நாமே நினைவூட்டிக்கொள்வோம்.

கிறித்தவர்கள் இந்த எதிர்காலத்திற்கு ஒரு பெயர் வைத்திருக்கின்றார்கள், அதுதான் நம்பிக்கை. நம்பிக்கை என்னும் வாசல் வழியாகத்தான் நாம் எதிர்காலத்திற்குள் நுழையமுடியும். நம்பிக்கை எளிமையான, கண்ணுக்குப் புலப்படாத வாழ்வு என்னும் சிறுவிதையாக இருக்கின்றது. காலம் கனிகின்றபோது அது விருட்சமாக வளர்ந்து நிற்கும். நம்பிக்கை என்பது நாம் பிசைந்து



1540 ஆம் ஆண்டு செப் 27 அன்று திருத்தந்தை மூன்றாம் சின்னப்பர் இயேசு சபையை அங்கீகரித்தார். இதுவே இயேசு சபையின் பிறப்பு தினம்.

வைத்திருக்கும் மாவு முழுவதையும் பக்குவமாகப் புளித்துப் பொங்கச்செய்யும் புளிக்காரம் போல இருக்கின்றது. அது வாழ்வின் எல்லா அம்சங்களுக்கும் அற்புதமான சுவை ஊட்டுகின்றது. இவ்வளவு காரியங்களும் எப்படி நடக்க முடியும்?



இத்தகைய நம்பிக்கையை எழுப்புவதற்கு தனியொருவன் இருந்தால் போதும். அந்த ஒரு ஆள் நீயாக இருக்கலாம். அப்புறம் அங்கே நீ என்று சுட்டிக்காட்டக்கூடிய இன்னொரு ஆள் வந்து சேரலாம், அப்புறம் இன்னும் ஒரு நீ என்று சுட்டிக்காட்டக்கூடிய ஆள்வரலாம். அப்புறம் என்ன? அந்த ஒரு நீயும், அடுத்த நீயும் அடுத்து இன்னும் ஒரு நீயும் சேர்ந்து நாம் ஆகின்றது. இல்லையா! நம்பிக்கை என்பது நாம் என்று நான்கு பேர் கூடுவதாலா துளிர்க்கின்றது? இல்லை. நம்பிக்கை ஒரு நீ என்னும் சிறு நெருப்புப் பொறிபோடு துவங்குகின்றது. நாம் என்று எல்லோரும் கூடிவருகின்றபோது புரட்சிவெடிக்கின்றது. இன்றைக்கு நான் உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகின்ற மூன்றாவது செய்தியே அதுதான். புரட்சி! கனிவுப் புரட்சி.

கனிவு என்பது என்ன? அன்பு நமக்கு அருகில் வந்து நாம் தொட்டுப்பார்க்கும் ஒன்றாக மாறுகிறதே அதுதான் கனிவு. கனிவு நமது இதயத்தில் ஊற்றெடுத்து நமது கண்கள் வழியாக, காதுகள் வழியாக மற்றும் கரங்களின் வழியாகப் பொங்கிப் பாய்கின்றது. கனிவு நம்மிடம் இருந்தால் நாம் நமது கண்களால் மற்றவர்களைக் காண்போம், நமது காதுகளால் மற்றவர்கள் சொல்வதைக் கேட்போம், குழந்தைகள் சொல்வதை, ஏழைகள் சொல்வதை, எதிர்காலத்தைக் கண்டு கலங்கி நிற்பவர்கள் சொல்வதைக் கேட்போம். அதுமட்டும் அல்ல, நம் எல்லோருக்கும் சொந்தமான இல்லமாக இருக்கின்ற, இன்றைக்கு நோயுற்று, நொந்து நூலாகி, பல்வேறு வகைகளிலும் பாழ்படுத்தப்பட்டுக் கிடக்கும் இந்தப் பூமிக்கும் செவிகொடுப்போம்.

கடவுளே நம்மோடு நமக்கு ஏற்றபடி உறவாடுவதற்காக இயேசுவாக இறங்கிவந்தார். நல்ல சமாரியன் தெரிந்தெடுத்துக்கொண்ட பாதையும் இதுதான். இயேசு தெரிந்தெடுத்துக்கொண்ட பாதையும் இதுதான். கனிவு என்பது பேராற்றல் மிக்கவர்கள், பேராற்றல் மிக்க ஆண்கள் மற்றும் பெண்கள், தங்களுக்கெனத் தேர்ந்துகொள்ளும் பாதை. கனிவு என்பது இயலாமை இல்லை. அது தீரம், துயரங்களைப் புறந்தள்ளும் அஞ்சாமை. அது தோழமையின் பாதை. பணிவின் பாதை.

உங்களது அதிகாரத்தை பணிவோடும், கனிவோடும் அன்போடும் நீங்கள் கையாண்டால், அது எப்படிப்பட்ட அளவிடமுடியாத அளவுக்கு அதிகமான, யாரும் எதிர்க்கமுடியாத அளவிற்கு வலுவான அதிகாரமாக இருந்தாலும், அது சேவையாக மாறுகின்றது, நல்லது செய்யும் ஆற்றலாக மாறுகின்றது.

மானுடத்தின் எதிர்காலம் என்பது அரசியல்வாதிகள், பெரும் பெரும் தலைவர்கள், பெரும் முதலாளிகளின் கைகளில் மட்டும் சிக்கிக் கிடக்கவில்லை. அவர்கள் அத்தனைபேருக்கும் மிகப்பெரிய பொறுப்பு இருக்கின்றது என்பது உண்மைதான். இருந்தாலும், மானுடத்தின் எதிர்காலம் என்பது மற்றவர்களை நீங்கள் என்றும், அவர்களையே நாங்கள் என்னும் வளையத்திற்குள் ஒருவர், என்றும் கண்டுணர்ந்துகொள்ளும் மனிதர்களின் கைகளில்தான் இருக்கின்றது. நம் எல்லோருக்கும் ஒருவர் ஒருவருடைய உதவி தேவைப்படுகின்றது.

எனவே, தயவுகூர்ந்து என்னையும் கனிவோடு கவனத்தில் வைத்துக்கொள்ளுங்கள், அப்படி நீங்கள் செய்தால்தான் மற்றவர்களுடைய நன்மைக்காக, உங்கள் ஒவ்வொருவருடைய நன்மைக்காகவும், நம் ஒவ்வொருவருடைய நன்மைக்காகவும் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியினை நான் நிறைவுசெய்ய முடியும். நன்றி!



அருளாளர் ரூபர்ட் மேயர் சே.ச.(1876–1945) ஜெர்மனியின் முனிஷ் நகர அப்போஸ்தலர் என அழைக்கப்பட்டார்.

# விடியலின் தொடக்கம் - ஆன்மிகப் பயிற்சிகள்

கு. பாப்டிஸ்ட், இயேசு சபை நவதுறவி.

எனது வாழ்வில் விடியலின் தொடக்கம் என்பது ஆன்மிகப் பயிற்சிகள்தான். எனக்கு உருக்கொடுத்ததும், உறவு கொடுத்ததும் இந்த ஆன்மிகப் பயிற்சிகள்தாம். எனக்கு வரங்கள் பொழிந்ததும், புதுவாழ்வு கொடுத்ததும் இந்த அன்மிகப் பயிற்சிகள்தாம். உலக இயல்பில் மூழ்கிக் கிடந்த எனக்கு, காற்று வீசுகின்ற திசையில் செல்லும் மணலாக இருந்த எனக்கு இறைவழியைக் காண்பித்ததும் இந்த ஆன்மிகப் பயிற்சிகள் தாம். இப்படிப்பட்ட சிறப்புத் தன்மைகளை என் வாழ்வில் ஏற்படுத்திய புனித இஞ்ஞாசியாரின் ஆன்மிகப் பயிற்சிகளைப் பற்றிய ஒரு சில அனுபவங்களை எழுத்தில் வடிக்கின்றேன்.

இயேசு சபையில் புனிதர்களை உருவாக்கியது இந்த ஆன்மிகப் பயிற்சிகள் தாம் என்று அறிந்த பொழுது, புனிதனாக அல்ல, நான் ஒரு மனிதனாக மாற இயலும் என்ற ஆசையோடு இந்த ஆன்மிகப் பயணத்தில் நுழைந்தேன். முதல் வார இறுதியில் செய்த பொதுப் பாவசங்கீர்த்தனம் இறைமன்னிப்பையும், அகச் சுதந்திரத்தையும் உணர்வதற்கு ஓர் இறைவழியாக அமைந்தது. இந்த அருள்சாதனம்தான் மற்ற நாள்களின் இறையனுபவங்களுக்கு அடித்தளமாக அமைந்துள்ளது. மேலும் இயேசுவை ஆழமாக அறிய வேண்டும் என்ற தூண்டுதலைத் தந்தது.

இயேசுவின் வாழ்க்கை நிகழ்வுகள் குறிப்பாக அவருடைய புதுமைகள் ஆகியவற்றை காட்சி தியானங்களாகச் செய்தபொழுது முதல் வாரத்தில் பெற்ற தூண்டுதலோடு இயேசுவை முழுமையாக அறிய முடிந்தது. அந்த அறிதல் என்னை அன்பு செய்யத் தூண்டியது. மேலும் இருவிருதுக் கொடிகள், மூவகை மனிதர்கள், மூவகைத் தாழ்ச்சி ஆகிய தியானங்களால் நான் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழப் போகின்றேன் என்ற தெளிவை என்னுள் விதைத்தது. அந்தத் தெளிவோடு என்னுடைய வாழ்க்கை நிலையைத் தெளிந்து தேர்ந்து கொள்ள முடிந்தது. இதன் வழியாக, இறையரசுப் பணிக்காக நான் துறவறத்தில் வாழ்வது இறைவனின் விருப்பம் என்று உணர்ந்தவுடன் எனக்குள் மிகுந்த மகிழ்ச்சி மலர்ந்தது.

'எல்லாம் எனக்காக' என்ற வார்த்தைகளின் மௌன அர்த்தத்தை மூன்றாம் வார தியானங்களின் வழியாக உணர்ந்தேன். மனுவுரு எடுத்ததும் எனக்காக, வாழ்ந்ததும் எனக்காக, வீழ்ந்ததும் எனக்காக என்று உணர்ந்த வேளையில் அவருக்காக என்ற வார்த்தை வினாவாக எழுந்தது என் இதயமதில். இரண்டாம் வாரத்தில் பெற்ற அன்புத் தூண்டுதல் அவரோடு பயணிக்கவும் உறுதிகொடுத்தது. கற்கள் மறைந்து இரத்தம் உறைந்த கல்வாரிப் பாதையில் அவரோடு பயணிக்க கண்ணில் நீர்த் துளிகள் படையெடுக்க உணர்ந்தேன். அவர் அன்பின் ஆழத்தை, ஒரு மனித உயிரின் பிரிவை, இயேசுவின் உடலை தாங்கிய இறையன்னையின் துயரத்திலிருந்து உணர்ந்தேன்.

இதுவரை பெற்ற அருளெல்லாம் முழுமை பெற காத்திருந்த நேரம் அது. அந்த எதிர்பார்ப்புகளால் நிறைந்த வேளையில் இறைவன் அனைத்திலும் பிரசன்னமாயிருக்கிறார். எனக்காக அனைத்திலும் உழைக்கின்றார் என்று அவரின் அன்பை முழுமையாக அடைந்து, உணர்ந்தேன். இந்த அன்பின் மிகுதியால் எடுத்துக் கொள்ளும் ஆண்டவரே என்ற வார்த்தைகள் அர்ப்பணமாக மலர்ந்தது. இந்த அர்ப்பணத்தோடு நுழைந்தேன் ஐந்தாம் வாரத் தியானத்தில் அதாவது என் வாழ்க்கைப் பயணத்தில்

விடியல் தேடும் மலரைப் போல
விழித்திருந்தேன் என் இறைவ(ரு)னுக்காக
தன் இயல்பை துறந்து இறங்கினான்(ர்).
என் இதயக் குடிலினில் ஒரு குழந்தையாக.
இணைந்தார் என் இரத்தத்தில் நண்பனாக - இப்பொழுது
நானும் அவரும் ஒரே பார்வையில் ஒரே பாதையில்
இம்மாபெரும் கொடையை வழங்கிய
இயேசு சபைத் தாய்க்கு நன்றி மலர்களுடன்...



1546 ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டு காந்தியா நகரில் முதல் இயேசு சபை பல்கலைக்கழகம் திருத்தந்தை மூன்றாம் சின்னப்பரால் அங்கீகரிக்கப்பட்டது.

# இயேசு சபை கல்விமனையில் செதுக்கப்பட்டு உலக அரங்கில் வரலாற்று முத்திரைப் பதித்த ஒரு சில முன்னாள் மாணவர்கள்


**ரெனே டேகார்ட்**
தத்துவியலாளர்,
கணித வல்லுநர்


**வால்டையர்**
எழுத்தாளர்,
பிரஞ்சு புரட்சியாளர்


**பிடல் காஸ்ட்ரோ**
க்யூபா
புரட்சியாளர்


**மோலியர்**
நையாண்டி நாடகம்,
பிரான்சு


**ஆல்பர்ட் கிட்ச்காக்**
திகில் படங்களின்
அரசர், ஸ்காட்லாந்து


**சபீர்**
ஹாட்மெயில்
நிறுவுநர்


**ஆர்தர் டொயல்**
ஷெர்லாக் ஹோம்ஸ்
எழுதியவர்


**ஜேம்ஸ் ஜோயஸ்**
எழுத்தாளர்,
அயர்லாந்து


**சகீர் ஹுசெய்ன்**
தபேலா
வித்வான்


**வர்கீஸ் குரியன்**
அமுல்
நிறுவுநர்


**அப்துல் கலாம்**
இந்திய
குடியரசு தலைவர்


**தாகூர்**
தேசிய கவி

## சினிமா துறை


**விஜய்**


**சூர்யா**


**S.J.சூர்யா**



**பிரசாந்த்**


**ஜெயம் ரவி**


**விஷால்**


**விக்ரம்**


**யுவன் சங்கர் ராஜா**


**சுஜாதா**


**பிரபு சாலமோன்**


**அரவிந்த்சாமி**


**அனிருத்**

## விளையாட்டு துறை


**விஜய் அமிர்தராஜ்**


**ரமேஷ் கிருஷ்ணன்**


**ஆனந்த்**


**ஆரோக்கிய ராஜீவ்**


**சரத் கமல்**


**V. பாஸ்கரன்**

*நீங்களும் உருவாகலாம் அல்லது தலைவர்களை உருவாக்கலாம் வாருங்கள்*



பதினேழாம் நூற்றாண்டில் வேர்பியஸ்ட் மற்றும் ஸ்காள் என்ற இயேசுவினர்கள் சீன மன்னர்களுக்கு பீரங்கிகள் வடிவமைக்க உதவினர்.

# கோதுமை மணியின் செம்மண் பாதைகள்

- **அருள்பணி. புகழ் சே.ச,** பெஸ்கி இல்லம், திண்டுக்கல்

**புதுமையோடு முளைத்தார் :**

1647 ஆம் ஆண்டு, நம் இந்திய நாடு சுதந்திரக் காற்றைச் சுவாசித்த முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே, மார்ச் மாதம் முதல் நாள் சால்வதோர் தே பிரிட்டோ, டோனா பிரிட்டெஸ் தம்பதியரின் பிள்ளைகள் நால்வருள் கடை மகனாக **ஜான் ஹெக்டர் தே பிரிட்டோ** பிறந்தார். பிறந்தவுடன், குழந்தை பிழைக்குமா என்ற ஐயம் எழுந்த நிலையில், அவர் தாய் அன்றே அவருக்கு வீட்டிலேயே திருமுழுக்காட்டினார். தமது மூன்று வயதில் தந்தையை இழந்த தனையனைப் பக்தியிலும் படிப்பிலும் அவர் தாய் வளர்த்தெடுத்தார்.

**ஆன்மிகத்தில் வளர்ந்தார் :**

போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பனில் பிறந்த பிரிட்டோ தாம் வெளிப்படுத்திய அறிவுக் கூர்மையினாலும் துடிப்பினாலும் தமது ஒன்பதாவது வயதில் அந்நாட்டு இளவரசர் பேத்ரோவின் தோழர்களுள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இளம் வயதில் மாட மாளிகையில் வசதிகள் பல பெற்றாலும் செல்வத்திலும் சொகுசிலும் இவர் மனம் இலயிக்கவில்லை. பிணி அவரை விட்டுப் பிரிந்தபாடில்லை. அவரது பதினோறாவது வயதில் மீண்டும் நோயுற்றார். மருத்துவர்கள் சிறுவன் பிழைப்பது அரிது என கைநெகிழ்ந்தனர். நம்பிக்கை குன்றாத அவர் தாயார், அழியாப்புனிதர் சவேரியாரிடம் மன்றாடினாள். மகன் பிழைத்தால் ஒரு வருடம் அவனுக்கு புனித சவேரியாரைப் போல, கறுப்பு அங்கி அணிவிப்பதாக நேர்ந்துகொண்டாள். மகன் பிழைத்தான். இறைத்திருவுளம் உணர்ந்தான். மனமாரத் தன்னை இறைப்பணிக்கு அர்ப்பணிக்கத் தயாரானான். **நீர் கொடுத்த வாக்கின் பயனாகவே நான் இறையழைத்தலைப் பெற்றேன் என அன்னைக்கு ஒரு மடல் வரைந்து அனுமதி கேட்டார்.**

அவரின் கறுப்பு அங்கியை வைத்து அவரைக் குட்டிச் சாமியார், போலிச் சாமியார் என உடனிருந்தோர் கேலி செய்தனர். இவை போன்ற ஏளனத்தைப் புன்முறுவலோடு ஏற்றதால் அன்றே மறைச்சாட்சி என அழைக்கப்பட்டார்.

இவர் நற்கருணை நாதரிடம் ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தார். ஒரு முறை நற்கருணைப் பவனியில் நற்கருணை நாதருக்கு அருகில் செல்ல அவருக்கு ஆசை ஏற்பட்டது. துறவிகள் மட்டுமே அருகில் செல்ல முடியும் என்பதனை உணர்ந்த அவர் எப்படியாகிலும் தானும் செல்ல வேண்டும் என்ற ஆர்வத்தில் திருப்பொருள் அறைக்குச் சென்று குருந்தளர் வெண்ணாடை (சர்ப்பிளீஸ்) கேட்டார். துறவியர் ஆடையில் இருந்ததால் அது அவருக்கு வழங்கப்பட்டது. திருவுடை அணிந்துகொண்டு, அடியார்கள் கூட்டத்தில் சேர்ந்துகொண்டார். நற்கருணை நாதரின் தரிசனம் பெற்றார். இத்தகைய அன்புச் சேட்டைகள் இவரது இறையழைத்தலை உறுதிப்படுத்தின. தனக்கு உயிரூட்டிய புனித சவேரியாரின் சபையும் கல்வி புகட்டிய குருக்களின் சபையுமாகிய இயேசு சபையில் அவரது தாயின் ஒப்புதலோடு இணைந்தார். திக்கற்ற பல தருணங்களில் தம் வாழ்நாளெல்லாம் இப்புனிதரின் பாதுகாவலை பிரிட்டோ உணர்வார்.

இளம்கைம்பெண்ணாகிய இவரது அன்னை போரிலே தனது கணவரையும் மூத்த மகனையும் இழந்ததன் காரணமாக, தனது செல்லப்பிள்ளையையும் இழக்க விருப்பமில்லாமல் பிரிட்டோவைச் சொந்த நாட்டிலேயே தக்கவைக்கப் பல முயற்சிகள் எடுத்தார். அவை யாவும் பயனற்றுப்போயின. இறையழைத்தலை யாராலும் திணிக்க முடியாது. அதே போல இறையழைத்தலை யாராலும் தடுக்கவும் முடியாது என்பதனை உணர்ந்தார்.



1602 ஆம் ஆண்டு மேத்தியு ரச்சி சே.ச.(1552–1610) முதல் உலக வரைபடத்தை சீனாவில் தயாரித்தார்.

## பயிற்சியில் தழைத்தார்:

1664 ஆம் ஆண்டு இயேசு சபையின் நவத்துறவறத்தில் சேர்ந்தார். பயிற்சியில் பக்குவப்பட்டுப் பணிபுரியப் பதமானார். மற்றவர்களிடம் முரண்டுபிடிக்கும் நபர்கள்கூட இவரது பொறுமையினாலும், விடா முயற்சியினாலும், துலங்கிடும் ஆர்வத்தினாலும் மனம்மாறி இறைவனோடு ஒப்புரவாகினர்.

பிரிட்டோ போர்த்துகல் நாட்டின் கோயம்பராவில் தத்துவமும் இறையியலும் பயின்றார். மறைப்பணித்தளங்களில் பணியாற்ற அருள்பணியாளர்களைத் தேட மதுரை மிஷனிலிருந்து பல்தசார் தெ கோஸ்தா வந்திருந்தார். ஏழை மக்களிடையே வாழும் பண்டாரங்கள் போல தனது வாழ்வை அமைத்ததால் இவர் பண்டார சுவாமிகள என்று அழைக்கப்பட்டார், இவர் வழியைத்தான் வீரமாமுனிவரும் பிரிட்டோவும் கையாண்டனர். இந்திய மறைப்பணித் தளத்திலுள்ள மிகுந்த அறுவடை, கோதுமை மணியாம் பிரிட்டோவை ஈர்த்தது. இந்தியா செல்ல உறுதி பூண்டார்.

## இந்தியா படர்ந்தார்:

1673 ஆம் ஆண்டு மங்கள வார்த்தைத் திருவிழாவன்று லிஸ்பன் நகரிலிருந்து காப்பிடானர் என்ற கப்பல் கோவாவிற்குப் புறப்பட்டது. கப்பலில் பிரிட்டோ உட்பட இயேசு சபையின் ஏழு குருக்களும் ஒன்பது இளவல்களும் ஓர் அருள்சகோதரரும் பயணித்தனர். ஆறு மாதப் பயணத்தில் கடல் நோயினால் அவர்களுள் பலர் பலியாயினர். மறைப்பணிக்கான ஆர்வத்தை நம் புனிதருக்கு ஊட்டிய பல்தசார் முதல் பலியாக நம் புனிதரின் கரங்களிலேயே உயிர்துறந்தார். நான்கு இளவல்களும் நான்கு குருக்களுக்கும் மட்டுமே கரைசேர்ந்தனர்.


கோவாவில் தமது பாதுகாவலர் புனித சவேரியாரின் அழியா உடலைத் தரிசித்து, தமது மறைமாநிலத் தலைவர் பணித்தபடி, கேரளாவிலுள்ள அம்பலக்காடு என்னும் கிராமத்திற்கு வந்தார். தமது பணியிடைப் பயிற்சியின் ஒரு பகுதியாகிய இஞ்ஞாசியாரின் ஆன்மிகப் பயிற்சிகளை மீண்டும் செய்து, புத்துணர்வுடன் தமது புதிய பணியைத் தொடங்கினார். இங்கேதான் தமது பெயரை அருளானந்தர் என்று தமிழ்ப் படுத்தினார். தமிழ் மொழியை நன்கு கற்று, காவி உடை பூண்டு, தாமும் பண்டார சுவாமியாக மாறினார்.

## மறைப்பணியில் பூத்தார்:

அம்பலக்காட்டிலிருந்து 800 கிமீ தொலைவிலுள்ள கொளை என்னும் ஊருக்குக் கால்நடையாகவே சென்று, அருளானந்தர் தமது பணியைத் தொடங்கினார். அச்சமயம் போரினாலும் சூதினாலும் பல அரசியல் நாடகங்கள் அரங்கேறின. அரசுகள் கவிழ்ந்தன. பஞ்சமும் பட்டினியும், அத்தோடு பிணியும், கோரத் தாண்டவம் ஆடின. இவை அனைத்தும் புதிய மறையினால் எழுந்த பழிகள் என்று சிலர் சாடினர். இந்தப் பழிகளைத் தாண்டியும் கிறிஸ்தவம் தமிழகத்தில் வேரூன்றியது. கிறிஸ்தவர்களை ஆதரித்த அரசர்கள் எதிரிகளோடுப் போரில் தோற்றாலும், வேதகலாபனை கிறிஸ்தவம் தழைக்க உதவி செய்தது. கொள்ளிடத்திற்கு வடக்கேயுள்ள தத்துவாஞ்சேரியில் தங்கி அருளானந்தர் மறைப்பணியாற்றினார். பல புதுமைகள் அருளானந்தரின் பரிந்துரை செபத்தால் நிகழ்ந்தன. பலரும் மெய்ம்மறையைத் தழுவிட நோயும் பேயும் உதவின. அப்பகுதியை ஆண்ட உடையார்பாளைய ஜமீன் புதிய மறையை ஆதரித்தார். அங்கே புதிய ஆலயம் அமைக்க உதவினார். அங்கிருந்து அருளானந்தர் சிறுகடம்பனூருக்குச் சென்று பணியாற்றினார். அங்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஆலயம் எழுப்பினார்.

அருளானந்தர் சிறுவர்களுக்கு மறைக்கல்வி புகட்டினார். தமது பாதுகாவலரின் பாணியில் ஒரு சிறு மணியைக் கொண்டு ஓசை எழுப்பி, மக்களை ஒருங்கிணைத்து, அவர்களை இறைநம்பிக்கையில் வளர்த்தெடுத்தார். கிறிஸ்தவர்களின் பெயர்ப்பட்டியலை சரிவரப் பராமரித்தார். திருப்பலி, நோயிற்பூசுதல் போன்ற அருளடையாளங்களை வழங்கி மக்களின் ஆன்ம வாழ்வைத் திடப்படுத்தினார். அருள்பணியாளர்கள் குறைவாக இருந்த அக்காலத்தில் உபதேசிமார்களை நியமித்து, அவர்களுக்குத் தகுந்த பயிற்சி கொடுத்து, மக்களின் இறைநம்பிக்கையைக் கட்டிக்காக்க வழிவகுத்தார்.

நம்பிக்கையாளர்கள் நடுவில் நிலவிய பூசல்களைத் தீர்த்து வைத்தார். பயிர்களைப் பூச்சிகள் தாக்கிய போது இவர் மந்திரித்த விபூதியை தண்ணீரில் கலந்து நிலங்களில் தெளித்து மக்கள் விவசாயத்தை அழிவிலிருந்து காத்தனர். மக்களின் சமூக, வர்க்க ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகக் குரல்கொடுத்தார். ஆன்மாக்களை





மீட்டெடுக்கும் தாகத்தில் சாதிய வேற்றுமைகளைப் பாரம்பரியம் எனக் கருதினார்.

பணி செய்த இடங்களில் எல்லாம் எதிர்ப்புகள் இருந்த போதிலும் இறைவனின் பராமரிப்பையும் பாதுகாப்பையும் உணரும் தருணங்களாக அவற்றைப் பாவித்தார். ஆண்டுதோறும் தமது பணி தொடர்பான தகவல்களை உரோமையில் உள்ள தலைமையகத்திற்குத் தவறாது அனுப்பி வைத்தார். தான் மறைச்சாட்சியம் தழுவுவதற்கு முன்தினம் வரை கடிதம் வரைந்தார். இதுவே அன்று நிலவிய அரசியல் நிலைமையை எடுத்தியம்பும் மிகச் சிறந்த வரலாற்றுக் களஞ்சியமாக இன்று நமக்கு அமைகின்றது.

### துயரில் கனிந்தார்:

பெரும்பாலும் பல நூறு மைல்களையும் கால்நடையாகவே கடப்பதால், கால் கொப்பளித்து வேதனையுற்றார். ஒருமுறை வேதாரணியத்துக்கு அடுத்த கரையாம்பட்டியில் பணியாற்றும் போது அவரது கண்ணில் பெரும் கட்டி புறப்பட்டது. பதினெட்டு நாள்கள் அந்த வேதனை நீடித்தது. தமது பாதுகாவலரிடம் தான் குணமானால் சாகும்வரை தமிழகத்தில் பணி புரிவதாக நேர்ந்துகொண்டார். அன்றே அற்புதமாக நலம் அடைந்தார்.

இன்றைய திருநெல்வேலி அருகே உள்ள வடக்கன்குளத்தில் மறைப்பணியாற்றினார். அங்கே இருநூறு பேர் திருமுழுக்குப் பெற்றனர். பிற சமயத்தின் இருப்புக்கே இவர் ஒரு அச்சுறுத்தலாகக் கருதப்பட்டார். இதன் பொருட்டு இவர் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கே அவரைக் கொலை செய்ய நாயக்கருடைய அனுமதி கிடைக்காததால் விடுவிக்கப்பட்டார். தஞ்சையில் ஆனந்தன் போன்ற நம்பிக்கையாளர்களை நேரில் சென்று தேற்றினார். வேத கலாபனையின் போது ஆனந்தன் போன்றோர் காட்டிய துணிவு அருளானந்தருக்கு ஆறுதலாயிருந்தது.

தமது இருபது வருடக் குருத்துவ வாழ்வின் பெரும் பகுதியை நற்செய்தியைப் பறைசாற்றுவதிலும் அதற்கான களப் பயணங்களிலும் செலவிட்டார். வட தமிழகப் பங்குகளின் பார்வையாளராக அருளானந்தர் நியமிக்கப்பட்டார். இதன் காரணமாக செஞ்சி, தஞ்சை, உத்திரமேரூர், சென்னை போன்ற இடங்களுக்குப் பயணமானார். பல நேரங்களில் வெளிப்படையாக மெய்ம்மறையைப் போதித்தால் ஆபத்து நேரிடும் என உணர்ந்து திருவண்ணாமலையை ஒட்டிய அடர்ந்த காடுகளில் மரங்களையே ஆலயமாகக் கொண்டு திருவழிபாட்டினை நிறைவேற்றினார். வேட்டவலம் குன்றினிலே ஓய்வெடுத்தார்.

மறவ நாட்டின் பெருந்திரளான மக்கள் அருளடையாளங்களைப் பெறப் பல மைல்கள் கடந்து வருவதைக் கண்டுணர்ந்த அருளானந்தர் 1686 ஆம் ஆண்டில் மறவ நாட்டில் வெள்ளைக்குளம் என்ற ஊரில் காலடி பதித்தார். நாடோடிப் பங்குத் தந்தையாக விளங்குவதால் பல பேருக்கு நற்செய்தி அறிவிக்க முடிகிறதென மனம் மகிழ்ந்தார். சூராணம், இளையாங்குடி, பரமக்குடி போன்ற ஊர்களில் மெய்ம்மறையைப் போதித்தார் எனப் பாரம்பரியமாக மக்கள் நம்புகின்றனர்.

ஆறு உபதேசிமார்களின் துணைகொண்டு, மறவ நாட்டில் மகத்தாக ஆன்மாக்களை மகசூல் செய்தார். அப்பகுதியின் சேதுபதியாக இருந்த இரங்கநாதத் தேவரின் அமைச்சர் குமாரப்பிள்ளை அருளானந்தரின் மறைச்சாட்சியத்திற்கு ஒரு முன்சுவை கொடுத்தார். கிறிஸ்தவத்தைப் பரப்பியதற்காக அவர்கள் எழுவரையும் மரத்தில் கட்டி, தடியால் அடித்தும் உதைத்தும் அவமானப்படுத்தினார். நீர்வதை என்ற நூதன சித்திரவதை முறைப்படி தண்ணீரில் அவர்களை அமிழ்த்தி வெளியே எழும்பும் போது பிற கடவுளின் பெயரை உச்சரிக்கச் சொல்லி வதைத்தார். வெற்றுடம்புடன் நண்பகலில் சுடுகின்ற கூர்மையான பாறையில் உருட்டிவிட்டார்.

சிலுவை நாயக்கர் என்பவரைத் திருநீறு பூசிக்கொள்ளும்படி வற்புறுத்தினார். மறுத்ததால் தடியால் அவர் முகத்தில் அடிக்க அவரது வலக்கண் இடம்பெயர்ந்து கன்னத்தில் தொங்கியது. அன்றிரவு சிறையில் அருளானந்தர் சிலுவை நாயக்கரின் அருகில் சென்று அந்தக் கண்ணை அதன் இடத்தில் வைத்து, சிலுவை அடையாளம் வரைந்து பார்வை வேண்டி இறைவனிடம் மன்றாடினார். அந்தோ புதுமை. கண் முற்றிலும் குணமாயிற்று. மறுநாள் குமாரப்பிள்ளையே சிலுவைநாயக்கரிடம் ஓலைச் சுவடி ஒன்றைக் கொடுத்து, வாசிக்கச்சொல்லிச் சோதித்தார். தேளிவாக வாசித்தும், அமைச்சர் மனம்மாறவில்லை.

இராமநாதபுரம் சேதுபதி முன் விசாரணைக்காக அருளானந்தர் நிறுத்தப்பட்டார். களவு மற்றும் பலதார முறையை விடுக்க மனமில்லாததால் தமது அரசில் கிறிஸ்தவ மறையைப் போதிக்கக் கூடாது எனப் பணித்துவிட்டு, அவரை விடுதலை செய்தார். காளையார்கோவிலில் பதின்மூன்று நாள்கள் சிறைப்படுத்தப்பட்டார், மேலும் சிறுமைப்படுத்தப்பட்டார். சுவாமிகளோ அனைத்தையும் இறைவனின் அதிமிக மகிமைக்காக மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார்.

### இளைப்பாற இடம்பெயர்ந்தார்:

தான் பெரிதும் எதிர்பார்த்த மறைச்சாட்சியம் கிட்ட வந்து, எட்டப் போனதை அருளானந்தர் உணர்ந்தார். விடுதலையடைந்த அவரை அவசர

வேலையாக தோப்பூருக்கு வரும்படி அழைத்த அவரது மேலதிகாரிக்குக் கீழ்ப்படிந்தார். மலபார் மாநிலப் பிரிதிநிதியாக உரோமைக்குச் சென்ற பிரான்சிஸ் என்பவர் இறந்ததால் அவருக்குப் பதிலாக பணித்தளத்தில் ஆழ்ந்த அனுபவம் பெற்ற அருளானந்தர் உரோமைக்கு அனுப்பப்பட்டார். போர்த்துக்கல் நாட்டிலிருந்து மலபார் மறைப்பணிக்குத் தேவையான பொருள் உதவியையும் ஆள் உதவியையும் பெற்றுவரத் தகுந்தவர் அவர் எனப் பணிக்கப்பட்டார். தன் விருப்பம் துறந்து தாயகம் பயணித்தார்.

1687 ஆம் ஆண்டில் மீண்டும் தாய் நாட்டில் கால் பதித்தார். மறவ நாட்டு மறைச்சாட்சியைக் காண நாடே திரண்டுவந்தது. அவர் எழுதிய கடிதங்களினாலும் பிறர் எழுதிய கடிதங்களினாலும் அவர் சுவைத்த துயரை அறிந்த மக்கள் அவரைப் புனிதராகவே கருதினர். கப்பலில் இருந்து இறங்கியவுடன் அவரது கரங்களை முத்தி அங்கியினை ஒத்தி தொட்டு ஆசீர் பெறச் சுற்றி நின்றனர்.

தாய் நாட்டிலும் மறவ நாட்டுப் பண்டார சுவாமியாகவே வாழ்ந்தார். ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டுமே புசித்தார். புலால் உணவும் இரசமும் தவிர்த்து, மரக்கறியையே உண்டார். அவரது நண்பர்கள் வற்புறுத்திய போதும் மலபார் பணித்தளத்தில் தமது தோழர்கள் வசதிகள் இல்லாமல் வாடும் போது தான் மட்டும் எப்படிக் களிகூர இயலும் என பதில் அளித்தார்.

அச்சமயம் தமது இளம் பருவத் தோழர் பேத்ரோதான் நாட்டின் அரசர் என அறிந்து அவரைக் கண்டு பணித்தளத்திற்குத் தேவையான பொருளுதவியை வேண்டினார். புனிதருக்குத் தேவையான உதவிகளைத் தர வாக்களித்த அரசன் அவரைத் தம்மோடு அரசவையில் பணியாற்றப் பணித்தார். எவ்வளவு முயன்றும் அருளானந்தரின் சிந்தையெல்லாம் மீண்டும் மறவ நாட்டை அடைவதிலேயே இருந்தது. தம் நாட்டிலே அவரைத் தக்கவைக்க எடுத்த முயற்சிகள் பலனளிக்காத நிலையில் இரண்டு ஆண்டுகளில் நாடு திரும்ப வேண்டும் என்ற உறுதிப்பாட்டோடு அரசர் அனுமதித்தார். அவரோடு இணைந்து ஏழு இளம் குருக்களும் பயணம் மேற்கொண்டனர். இம்முறை பயணத்தில் இரண்டு குருக்கள் தொற்று நோய்க்குப் பலியாயினர்.

1690 நவம்பர் மாதம் மீண்டும் கோவா வந்தடைந்தார். தமது பாதுகாவலரின் அழியாவுடலுக்கு மரியாதை செலுத்திவிட்டு தோப்பூருக்குப் பயணமானார். அங்கே சிலுவைநாயக்கரின் வீடு இருந்தது. அவரும் அவர் மகன் மரியதாசனும் அருளானந்தரோடு பயணம் மேற்கொண்டனர். மதுரை மண்டல ஆய்வாளராக நியமிக்கப்பட்டதால் ஆவூர், வடுகர்பட்டி, காமநாயக்கன்பட்டி, மதுரை போன்ற பணித்தளங்களுக்குச் சென்று பார்வையிட்டார். வழியெங்கும் பலரையும் மெய்ம்மறையில் வளர்த்தெடுத்தார். மதுரையிலிருந்து முள்ளிப்பாடி (மலையடிப்பட்டி), வல்லம், கூத்தூர், அகரம் போன்ற தமது பழைய பணித்தளங்களுக்குச் சென்று பார்வையிட்டார். ஆயரைக் கண்ட ஆடுகள் போல மக்கள் மட்டற்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். கயத்தாறு தொடங்கி, கோயம்பத்தூர், சாந்தோம் (சென்னை) எனக் கால்நடையாகவே சென்று பணியாளர்களையும் மக்களையும் சந்தித்து மெய்ஞ்ஞானம் போதித்தார். மாநிலத் தலைவரிடம் தமது அறிக்கையைச் சமர்ப்பித்தார்.



### துணிவால் அறுக்கப்பட்டார்:

தடைசெய்யப்பட்ட மறவ நாட்டில் 1692 ஆம் ஆண்டு மே மாதம் மீண்டும் தடம் பதித்து, மக்களின் ஆன்ம தாகத்தை அருளானந்தர் தணித்தார். அரசனுக்கு எதிராகச் சதித் திட்டம் தீட்டியதால் அமைச்சர் குமாரப்பிள்ளையின் கைகள் மற்றும் கால்கள் துண்டிக்கப்பட்டு கழுமரம் ஏற்றப்பட்டார். புதிய அமைச்சராக முருகப்ப பிள்ளை நியமிக்கப்பட்டிருந்தார். சேதுபதி இரங்கநாத தேவரின் தடை உத்தரவினால் மறவ நாட்டின் எல்லைப்புறத்தில் தங்கிப் பணியாற்றிய பணியாளர் முனியூர் சொக்குத் தேவரின் ஆதரவைப் பெற்றதால் அங்கிருந்தே மறைபோதகப் பணியைத் தொடங்கினார். மறவ நாட்டில் அறுவடை செழித்தோங்கியது. பல்லாயிரக்கணக்கான மக்கள் திருமுழுக்குப் பெற்றனர். பல கோவில்களும் எழுப்பப்பட்டன. அனைத்து இன மக்களும் சாதி வேறுபாடின்றி மெய்ம்மறையைத் தழுவினர்.

இவ்வாறு, கிறிஸ்தவராக மாற விரும்பியவர்களுள் ஒருவர் சிறுவாளை ஊரை ஆண்ட தடியத்தேவர். இவர் இராமநாதபுர அரச வம்சத்தில் பிறந்தவர். மன்னராகும் உரிமையை இழந்து சேதுபதியின் கீழ் ஆட்சி புரிந்துவந்தார். இவருக்கு ஐந்து மனைவிகள் இருந்தனர். தீராத நோய் ஒன்றினால் பல ஆண்டுகள் படுத்த படுக்கையானார். அனைத்து மருந்துகளும் மாந்திரீகங்களும் பொய்த்தன. தனது எல்லையில் தங்கியிருந்த சக்திவாய்ந்த கிறிஸ்தவ சந்நியாசி பற்றிக் கேள்வியுற்றார். குருவால் வர இயலாவிட்டாலும் அவரது சீடருள் ஒருவரையேனும் அனுப்பி, தனக்காக மன்றாடும்படி தூது அனுப்பினார். தடியத்தேவரின் உண்மை மனநிலையை அறிய வேண்டி அருளானந்தர் சிலுவை நாயக்கரை அனுப்பிவைத்தார்.

சிலுவை நாயக்கர் தடியத்தேவரைச் சந்தித்து அடிப்படை மறைக்கல்வியைப் புகட்டினார். யோவானின் நற்செய்தியை வாசித்தார். நம்பிக்கை அறிக்கையைத் தடியத்தேவர் ஏற்று உரைத்தார். அவற்றைக்

கேட்கும் போதே உடல்நிலையில் மாற்றம் ஏற்படுவதை அவர் உணர்ந்தார். பல ஆண்டுகள் எழ இயலாத நிலையில் இருந்த அவர் எழுந்தார்: குதித்தோடினார். தாம் முற்றிலும் குணமானதை உணர்ந்தவராய்த் திருமுழுக்கு வேண்டினார்.

தடியத்தேவருக்கு திருமுழுக்குக் கொடுப்பதன் விளைவுகளை அருளானந்தர் அலசி ஆராய்ந்தார். தடியத்தேவரின் மனமாற்றம் மறவ நாட்டையே மனந்திருப்ப சாதகமாகவும் இருக்கலாம் அல்லது சேதுபதியின் சினத்தைத் தூண்டி, கிறிஸ்தவர்களின் வாழ்விற்கே பாதகமாகவும் அமையலாம் என்பதை உணர்ந்தார். மற்ற உபதேசிமார்களோடு கலந்தாலோசித்தார். தமது ஆன்மகுருவிடம் ஆலோசனைக் கேட்டார். தூய ஆவியின் வழிநடத்துதலை அறிந்தார். தனது கல்வாரி நோக்கிப் பயணமானார்.

1693 ஆம் ஆண்டு திருக்காட்சித் திருநாளன்று ஏறக்குறைய இருநூறு பேர் கண்ணப்பன் கோட்டை என்ற ஊரில் திருமுழுக்குப் பெற்றனர். இதை நேரில் கண்ட தடியத்தேவர் தாமும் திருமுழுக்குப்பெற விழைந்தார். அருளானந்தர் வழங்க மறுத்தார். தமக்கிருக்கும் ஐந்து மனைவிகளின் காரணமாகவே தமக்குத் திருமுழுக்கு வழங்கப்படாததை உணர்ந்தார் தடியத்தேவர். உடனே தமது கோட்டைக்குச் சென்று மனைவிகளை அழைத்தார். தான் தனது முதல் மனைவியோடு திருமுழுக்குப் பெறப் போவதாகவும் மற்றவர்களைச் சகோதரிகளாகப் பாவித்து அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்துகொடுப்பதாகவும் வாக்களித்தார். இதனை சற்றும் எதிர்பாராத நான்கு மனைவியரின் கண்ணீர் தடியத்தேவரின் முடிவை உலுக்க முடியவில்லை. இவர்களுள் இளையவள் கடலாயி. சேதுபதியின் தங்கை மகள். வெள்ளைக்கார சந்நியாசிதான் தனது இந்த நிலைக்குக் காரணம் என உணர்ந்து தனது மாமனிடம் முறையிட்டாள். தனது மருமகளின் இந்தக் கதிக்குக் காரணமான அருளானந்தரையும் அவரது சீடர்களையும் சிறைப்பிடிக்க உத்தரவு பிறப்பித்தான். அவர் எழுப்பிய ஆலயங்களை தரைமட்டம் ஆக்கவும் ஆணையிட்டான்.

1693 சனவரி 8 ஆம் தேதி தமது இறுதி திருப்பலியை அருளானந்தர் முனியூரில் நிறைவேற்றினார். எந்நேரமும் தான் கைதாகலாம் என எதிர்பார்த்தார். சரியாக நடுப்பகலில் குதிரை வீரர்கள் புனிதரையும் அவரை விட்டுப்பிரிய மனமில்லாத இரு சிறுவர்களையும் ஒரு பிராமண உபதேசியாரையும் கயிற்றால் கட்டி, அனுமந்தக்குடி என்ற இந்து மக்கள் மிகுந்த கிராமத்திற்கு இழுத்துச் சென்றனர். அந்த ஊரின் திருநாளாகிய அன்று ஆலயம் வந்தவர்கள் கோயில் தேரில் கட்டுண்டிருக்கும் இவர்களை ஏளனம் செய்து பழித்துரைத்தனர்.

**களத்தில் அடிக்கப்பட்டார்:**

மறுநாள் அருளானந்தரும் அவர் உடனிருந்தவர்களும் கயிற்றால் பிணைத்து குதிரைக்குப் பின்னால் இழுத்துச் செல்லப்பட்டனர். வழியெங்கும் புரட்டி எடுக்கப்பட்டதால் புனிதரின் வெண்ணிற மேனி செந்நிறமாய் மாறியது. மேலும் இரண்டு நாள்கள் குதிரைப் பயணமாகி இராமநாதபுரம் வந்தடைந்தனர். அங்கே இருண்ட சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்களின் வரவாலும் செபத்தாலும் அதுவே ஆலயம் போல மிளிர்ந்தது. சேதுபதி வெளியூர் சென்று ஏற்க்குறைய ஒரு வாரத்திற்குப் பிறகுதான் தலைநகர் வந்தான். எந்தவொரு விசாரணையும் இன்றி அருளானந்தரைக் கொல்ல வேண்டும் எனத் தனது இந்து சமய குருவால் பரிந்துரைக்கப்பட்டார். அவரே பத்திரகாளி பூஜையினால் புனிதரைக் கொல்லப் போவதாகச் சூளுரைத்தார்.

பத்து நாள்களுக்கு மேல் பல முயற்சிகளை மேற்கொண்டும் பயனளிக்காததால் பலரின் ஏளனத்திற்கு ஆளாயினர். சுவாமியின் சீடர்களை விசாரித்தனர். அவர்களும் உறுதியாய் இருந்ததால் அவர்களைச் சுட்டு வீழ்த்த உத்தரவு பிறப்பித்தான். என்ன ஆச்சரியம்! துப்பாக்கிகள் அவர்கள் முன் செயல்பட மறுத்தன. சுவரை நோக்கி இயக்கும் போது சுட்டன.

அல்லிக்குளம் என்ற அரண்மனைப் பகுதியில் புனிதரின் செப ஏட்டினை அவரிடமிருந்து பிரித்து அவரைச் சுட்டுக்கொல்ல உத்தரவிட்டான். என் குருவைக் கொல்லும் முன் என்னைக் கொன்றுவிடு எனத் தடியத்தேவர் குறுக்கே பாய்ந்தார். இத்துறவியை இங்கே கொன்றால் நாட்டில் பெரும் குழப்பம் நேரிடும் என உணர்ந்த சேதுபதி அவரை ஓரியூருக்கு நாடு கடத்தினான். அங்கே ஆளுநராக இருந்த தம் சகோதரனிடம் சுவாமியைக் கொன்றுவிடு என்று ஓலை அனுப்பினான்.

ஏறக்குறைய 40 கல் தொலைவு தூரத்தை மூன்று நாள்கள் கால்நடையாகவே புனிதர் கடந்தார். ஓரியூரின் வடக்கே புல்லூர் என்ற கிராமத்தைச் சார்ந்த ஒரு பெண் சுவாமிகள் இளைப்பாறும் பொழுது அவர் மேல் இரக்கப்பட்டு, பசும்பால் கொடுத்தாள். அவளது இவ்வுதவிக்காகப் புல் மலிந்த இவ்வூர் இனி நெல் நிறைந்த நெல்லூராகும் என ஆசீர்வதித்தார். அன்று முதல் இன்றுவரை ஓர் ஆண்டுகூட நெல் விளையத் தவறியதில்லை.



**செம்மண்ணில் விதைக்கப்பட்டார் :**

ஓரியூரை ஆண்ட உதயத்தேவர் வாதநோயாலும் தொழுநோயாலும் அவதிப்பட்டார். தனக்குச் சாதகமாகச் சுகம் தந்தால் புனிதரை விடுவிப்பதாக ஆசைகாட்டினார். கொலைத் தண்டனையைக் காலம்தாழ்த்தினார். அதற்குப் புனிதர் இணங்காததால் இறுதியாக, பிப்ரவரி 4 ஆம் நாள் ஓரியூரின் வடக்கே பாம்பாற்றின் தென்கரையில் உள்ள திட்டை என்ற மண் மேட்டில் புனிதரை வாளால் வெட்டிக்கொல்ல ஏற்பாடுகள் செய்தார். அன்று விபூதிப் புதன். தமது முடிவு அருகிலிருப்பதை உணர்ந்த அருளானந்தரின் முகம் ஒளிர்ந்தது.

அங்கிருந்த சிறு மண்மேட்டின் மீது முழந்தாளிலிருந்து செபித்தார். தன்னைக் கொல்லக் காத்திருக்கும் பெருமாளுக்காகவும் இறைவனிடத்தில் வேண்டினார். அங்கே சூழ்ந்திருந்தவர் யாவரும் அவர் முகத்தில், பயத்தை அல்ல, பரவசத்தைக் கண்டனர். நான் தயாராகிவிட்டேன், நீ உன் கடமையைச் செய் என, பெருமாளைப் பார்த்துக் கூறினார்.

ஓங்கிய வாள் தாழ்ந்தது, புனிதரின் தலை வீழ்ந்தது.
அது முன்னோக்கி விழாமல் விண்ணோக்கி விழுந்தது.
கழுமரத்தில் உடல் வீசியதும்
இரவெல்லாம் அதன் மேல் ஒளி வீசியது
சிதைந்த உடலும் மலர்ந்தது, சிவந்த மணலும் மணந்தது.

**மனதில் வேரூன்றினார் :**

இறந்த பிறகு 225 கிமீ தொலைவில் தளையூரில் இருந்த தம் தோழர் ஜான் தே கோஸ்தாவிற்கு துண்டிக்கப்பட்ட தம் தலையைக் கரங்களில் ஏந்தியவராக, கனவில் அருளானந்தர் தோன்றினார். எட்டு நாள்களுக்குப் பிறகு இச்செய்தியைக் கேள்வியுற்ற போதுதான் அது கனவல்ல, காட்சி என்பதை அவர் உணர்ந்தார்.

ஒரு வாரம் கழித்து, அவரது மண்டையோட்டையும் உடலின் எஞ்சிய எலும்புத் துண்டுகளையும் திருப்பண்டமாகச் சேகரித்து, லெய்னஸ் என்ற இயேசு சபை குருவிடம் கிறிஸ்தவர்கள் ஒப்படைத்தனர். பெருமாளின் வாளும் உடல் தாங்கிய கழுமரத்தின் ஒரு பகுதியும் புனிதரின் மற்ற திருப்பண்டங்களும் கோவாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டன.

தன் மகனின் இறப்பைக் கேள்வியுற்ற தாய் வாடவில்லை, வருந்தவில்லை. விண்ணில் பிறந்த தன் செல்ல மகனுக்காய் விதவைக் கோலம் களைந்து, திருமண உடையில் திருப்பலி கொண்டாடினார்.

புனிதர் மரித்த மறு ஆண்டே அவரது அருளாளர் பட்டத்திற்கான பணிகள் மயிலை ஆயரால் தொடங்கப்பட்டன. 1741 ஆம் ஆண்டு தகவல் சேகரிப்பு நிறைவேறியது. 1773 ஆம் ஆண்டு உலகளாவிய இயேசு சபை தடைசெய்யப்பட்டதன் காரணமாக, 1853 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21 ஆம் தேதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

**புனிதர் மலர்ந்தார் :**

இந்திய நாடு சுதந்திரம் பெற சரியாக மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் அருளானந்தர் பிறந்தார். அதே நாடு சுதந்திரம் பெற மூன்று மாதங்களுக்கு முன்னர் அதாவது ஜூன் திங்கள் 22 ஆம் நாள் திருஅவையின் புனிதர் பட்டியலில் இணைக்கப்பட்டார்.

செம்மண் புனிதர் வாழ்ந்த போது ஆற்றிய புதுமைகளைவிட மரித்த பிறகு நிகழ்த்திய புதுமைகள் ஏராளம். அவர் மரித்தது ஒரு புதன் கிழமையாதலால் ஒவ்வொரு புதன்கிழமை அன்றும் அதிக எண்ணிக்கையில் மக்கள் ஓரியூருக்கு திருயாத்திரை மேற்கொண்டனர். அவரை வெட்டிய பெருமாளே தனது செய்கைக்காக மனம்நொந்து புனிதரின் முதல் சீடரானார்.

முடவர்கள் துள்ளிக் குதித்தனர், குருடர்கள் பார்வை பெற்றனர், இறந்தவர்கள் எழுந்து நடந்தனர். நோய்கள் குணமாகின, பேய்கள் ஓடி ஒளிந்தன, குழந்தைப் பேறில்லாதோர் பேறு பெற்றனர்.

வாருங்கள் புனித இஞ்ஞாசியாரின் ஆன்மிகத்தில் இறைவனைக் கண்டு, புனித சவேரியாரின் பரிந்துரையால் இவ்வுலகை வென்று, புனித அருளானந்தரின் வழியில் இறைவார்த்தையை வாழ்வாக்குவோம்.

"கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்".
(யோவான் 12:24).



உலகளாவிய இயேசு சபையின் முதல் பள்ளிக்கூடம் இத்தாலி நாட்டு மெசினா நகரில் 1548 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

# MNL செய்தி துளிகள்

- 26.11.18 2018 ஆம் ஆண்டுக்கான சென்னையின் ஹீரோ விருது (கல்வி துறையில்) இலொயோலா கல்லூரிக்கு ட்ரிம் கிராப்ட் நிறுவனத்தின் சார்பாக வழங்கப்பட்டது.
- 03.12.18 பேதுரோ அருப்பே இறையடியாராக அறிவிக்கப்பட்டார்.
- 16.12.18 'வெளிச்சம் பழங்குடி இருளர் இயக்கம்' நிறுவப்பட்டது.
- 06.01.19 'இளையோர் சமூக மாற்றத்தின் கருவிகள்' என்ற தலைப்பில் மாஜிஸ் 2019 திருச்சி வளனார் கல்லூரியில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.
- 19.01.19 அருள்கடல் தமிழக இயேசு சபையின் வட்டார இறையியல் மையம் தனது 40 ஆவது ஆண்டு மாணிக்க விழாவினை நன்றிப்பெருக்குடன் கொண்டாடியது.
- 08.03.19 தமிழக அரசின் சிறுபான்மையினர் துறை உறுப்பினராக அருள்பணி செபமாலை இருதயராஜ் நியமிக்கப்பட்டார்.
- 01.06.19 சேலம் அடுத்த அரூரில் புதிய இயேசு சபை குழுமம் அமைக்கப்பட்டது.
- 30.06.19 இறையடியார் லூயி லெவே அவர்களின் திருநிலைப்படுத்துதலுக்கான தகவல் சேகரிப்பு பணி நிறைவேறியது.
- 15.07.19 திருச்சி வளனார் கல்லூரி தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று அவை நான்காவது சுழற்சியில் தேசிய அளவில் A++ தகுதி பெற்ற முதல் கல்லூரியாக அறிவிக்கப்பட்டது.
- 17.07.19 கருமாத்தூர் அருளானந்தர் கல்லூரியின் பொன்விழா தொடக்க விழா அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாடப்பட்டது.
- 10.09.19 பாளையங்கோட்டை புனித சவேரியார் கல்லூரி தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று அவை நான்காவது சுழற்சியில் தேசிய அளவில் A++ தகுதி பெற்று தர வரிசையில் முதலிடத்தைப் பெற்றது.
- 21.09.19 அருள்பணி மரியபாக்கியம் சுற்றுச்சூழல் சார்ந்த தமது ஆராய்ச்சியின் பொருட்டு 2019 ஆம் ஆண்டுக்கான அறிவியல் களஞ்சியம் விருது பெற்றார்.
- 22.09.19 திருச்சி வளனார் கலைமனைகளின் 175 ஆண்டுகள் கல்விப்பணியினை முன்னிட்டு 10 கிமீ மாரத்தான் ஓட்டப்பந்தயம் விமரிசையாக நிகழ்ந்தது. 8000 மாணவர்கள் பங்கேற்றனர்.
- 29.09.19 புதுப்பிக்கப்பட்ட ஓரியூர் அருளானந்தர் திருத்தல திருப்பீடம் சிவகங்கை மறைமாவட்ட ஆயர் மேதகு சூசைமாணிக்கம் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது.
- 02.11.19 திருச்சி புனித வளனார் கல்லூரிக்கு சிறந்த சமூக சேவைக்கான தேசிய அளவிளான ஆரோபத் விருது அக்கல்லூரியின் செப்பர்ட் விரிவாக்கத் துறையின் பொருட்டு வழங்கப்பட்டது.
- 28.12.19 ஒருங்கிணைந்த தமிழக இயேசு சபையின் இறுதி மாநில அமர்வில் இயேசு சபையின் புதிய மாநிலமாக சென்னை மாநிலம் அறிவிக்கப்பட்டது. அதன் முதல் தலைவராக அருள்பணி செபமாலை இருதயராஜ் பணியேற்றார்.



திருத்தந்தை 15 ஆம் கிரகோரி (1554–1623) இயேசு சபையினரிடம் கல்விகற்ற முதல் திருத்தந்தையாவார்.

# மலர்ந்தது மூன்றாம் குழந்தை

### சவால்களை சரித்திரங்களாக்கும் இயேசுசபையின் புதிய தொடக்கம்.

- **அருள்பணி. நா.பார்த்தசாரதி சே.ச,** தூய வளனார் கல்லூரி, திருச்சி.

இயேசு சபை மதுரை மறைமாநிலம் தனது மூன்றாவது குழந்தையான சென்னை மறைமாநிலத்தை டிசம்பர் 28, 2019 அன்று பிரசவித்தது. மதுரை மறைமாநில கூடுகையானது சென்னை இலொயோலா கல்லூரி வளாகத்தில் டிசம்பர் 28, 2019 காலை 9 மணியளவில் மகிழ்வோம் ‘பணியில் ஒளிர்வோம்’ என்ற மைய நோக்குடன் தொடங்கியது. இயேசு சபையைத் தொடங்கிய தூய இலொயோலா இஞ்ஞாசியாருக்கு மலர்த்தூவி அஞ்சலியுடன் தொடங்கப்பட்டது. தெற்காசிய இயேசு சபைத் தலைவர் அருள்பணி. ஜார்ஜ்பட்டேரி சே.ச, மதுரை, ஆந்திரா, கர்நாடகம், கேரளா, இலங்கை மறைமாநிலத் தலைவர்கள், சென்னை மறைமாநில நியமனத் தலைவர், இயேசுசபைத் தோழர்கள், உடன்பணியாளர்கள் மற்றும் பணித்தள மக்களோடு பவனியானது போர் பறையிசையுடன் தொடங்கியது. பவனியின் நிறைவாகக் கிறிஸ்து அரசர் திருக்கோவிலில் திருப்பலியானது இயேசு சபையினர் இயற்றிய பாடல்களோடு தொடங்கியது.

மதுரை மறைமாநிலத் தலைவர் அருள்பணி. டெனிஸ் பொன்னையா சே.ச. திருப்பலிக்குத் தலைமையேற்று மறையுரையில் சென்னை மறைப்பணித்தளத்தின் வளர்ச்சி நிலைகள் மற்றும் சென்னை மறைமாநில நியமனத் தலைவர் அருள்பணி. செபமாலை இருதயராஜ் சே.ச. அவர்களின் பணி வாழ்வை விரிவாகப் பகிர்ந்தார். பின்பு அகில உலக இயேசுசபைத் தலைவர் பேரருள்திரு. அர்த்துரோ சோசா சே.ச, அவர்கள் எழுதிய சென்னை மறைமாநில உருவாக்கக் கடிதம் மற்றும் சென்னை மறைமாநிலத்தின் முதல் தலைவராக அருள்பணி. செபமாலை இருதயராஜ் சே.ச. அவர்களின் நியமனக் கடிதத்தையும் வாசித்து அதிகாரப்பூர்வமாக நியமித்தார். பின்பு திருப்பலியானது புதிய சென்னை மறைமாநிலத் தலைவரால் தொடரப்பட்டது.

திருப்பலிக்குப் பின்பு பெட்ரம் அரங்கில் அருள்பணி. பிரான்சிஸ் சேவியர் சே.ச. அதிபர், இலொயோலா கல்லூரி, அனைவரையும் வரவேற்றார். பின்பு அகில உலக இயேசுசபைத் தலைவரின் வாழ்த்து காணொளி ஒளிப்பரப்பட்டது. அதனைத் தொடர்ந்து முதல் அமர்வில் அருள்பணி யேசுமரியான் சே.ச, மற்றும் அருள்பணி. செபமாலை இருதயராஜ் சே.ச. அவர்களின் சென்னை மறைமாநில உருவாக்கப் பணிகள் மற்றும் கடந்து வந்த பாதைகள் பற்றி மிகத் தெளிவாகப் பகிரப்பட்டது. தெற்காசிய இயேசுசபைத் தலைவர் அருள்பணி. ஜார்ஜ்பட்டேரி சே.ச. அவர்கள் சென்னை மறைமாநில இணையத்தளத்தை தொடங்கி வைத்து வாழ்த்தினார்.



சென்னை மறைமாநிலப் பணிகள் உருவாக்கத்தில் இயேசு சபையினரின் அயராத உழைப்பைப் பற்றி பணித்தள மக்கள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி நிறைந்தவர்களாகப்



அருள்பணி செபமாலை இருதயராஜ் சே.ச. இயேசு சபை சென்னை மாநிலத்தின் முதல் தலைவராவார்.

பகிர்ந்தனர். இனி வரும் காலங்களிலும் இயேசு சபையினர் விளிம்புநிலை மக்களின் உரிமைகளுக்காகவும் தொடர்ந்து உழைத்திட கேட்டுக்கொண்டனர். மியான்மார் நாட்டில் மறைபரப்புப் பணியாளராக இருக்கும் அருள்பணி. சி.அமல் சே.ச. அவர்களின் பகிர்வு அனைவரையும் சவாலுக்கு உள்ளாக்கியது. பின்பு சென்னை மறைமாநில உருவாக்கத்தில் தங்களையே கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இணைத்துக் கொண்ட ஜெர்மனி நாட்டின் திரு. துர்காய் மற்றும் திருமதி. மேரி குடும்பம் மற்றும் அனைத்து தன்னார்வத் தொண்டர்களுக்கு நன்றி கூறப்பட்டது. அவர்களின் சார்பாக திரு. துர்காய் மற்றும் மேரி அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள். மாலை தேநீர் இடைவேளைக்குப் பின்பு புதுப்பிக்கப்பட்ட சென்னை மறைமாநில அலுவலகம் அர்ச்சிக்கப்பட்டது. இரவு உணவுக்கு முன்பு மண்ணின் கலைகளை மண்ணின் மைந்தர்கள் மண்வாசனையோடு வழங்கி மகிழ்வித்தனர்.



இரண்டாம் நாளின் துவக்கமாக குழுப் புகைப்படம் எடுக்கப்பட்டது. துவக்க வழிபாடானது அருள்கடல் இளவல்களால் வழிநடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து சென்னை மறைப்பணித் தளத்தில் பணியாற்றி இறைவனில் கலந்த நம் முன்னவருக்கு அஞ்சலியும், வாழும் பணித்தள முன்னோடிகளுக்கு மரியாதையும் செய்யப்பட்டது. பின்பு மதுரை மறைமாநிலத் தலைவர் அருள்பணி. டெனிஸ் பொன்னையா சே.ச, அவர்கள் சென்னை



மறைமாநிலத்திற்கான ஆக்கப்பூர்வமான அறிவுரைகளும், நெஞ்சம் நெகிழ்ந்த வாழ்த்துகளும், இருமாநிலங்களும் தொடர்ந்து பயணிக்க வேண்டிய பாதைகளைப் பற்றி பகிர்ந்தார். பின்பு மறைந்த முன்னோடிகளின் நினைவாக இரு மரக்கன்றுகள் பெட்ராம் நூலகத்திற்கு முன்பு இருபுறமும் இருமாநிலத் தலைவர்களால் நடப்பட்டன.

மறைமாநிலக் கூடுகையின் நிறைவாகத் திருப்பலி கொண்டாட்டத்தை மதுரை மறைமாநிலத் தலைவர் நிறைவேற்ற, சென்னை மறைமாநிலத் தலைவர் தன்னுடைய நன்றிகளையும், கனவுகளையும், வளர்ச்சிக்கானப் பணிகளையும் பற்றி மறையுரையில் பகிர்ந்து அனைவரையும் தனக்காகவும், சென்னை மறைமாநிலத்தின் வளர்ச்சிக்காகவும் இறைவேண்டல் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். திருப்பலியின் இறுதியில் மறைமாநிலக் கூடுகைத் தயாரிப்பு குழுவின் சார்பாக அருள்பணி. டார்வின் சே.ச, நன்றி கூறினார். மதிய உணவோடு ஒருங்கிணைந்த மதுரை மறைமாநிலக் கூடுகை மற்றும் புதிய சென்னை மறைமாநில உருவாக்க நிகழ்வுகள் இனிதே நிறைவேறியது.

"அனைத்தும் இறைவனின் அதிமிக மகிமைக்கே!" என புதியத் தேடல்களோடு இயேசுவின் பாணியில் விடுதலைப் பணியில் இணைவோம் புதிய சமுதாயம் படைப்போம்.



அருள்பணி அலெக்சாண்டர் ரோடஸ் சே.ச. வியட்நாமீஸ் மொழியின் எழுத்துக்களை உருவாக்கி தந்தார்.

# என் இறையழைத்தல்

**- கா. ஜான் பீட்டர் பசில்,** இயேசு சபை புகுமுக நவதுறவி, கஸ்தம்பாடி.

"உங்களுக்காக நான் வகுத்திருக்கும் திட்டங்கள் எனக்குத் தெரியும் அன்றோ! அவை வளமான எதிர்காலத்தையும் நம்பிக்கையையும் உங்களுக்கு அளிப்பதற்கான நல்வாழ்வின் திட்டங்களே அன்றி, கேடு விளைவிப்பதற்கான திட்டங்கள் அல்ல" ( எரேமியா-29:11 ) என்று கூறிய இறைவன் தகுதியற்ற அடியவனாகிய எனக்களித்த நல்வாழ்வின் திட்டமே என் இறையழைத்தல். என் தாயின் கருவிலே பெயர்சொல்லி அழைத்த என் இறைவன் அந்த அழைப்பிற்குள்ளாக என்னை கொண்டுவர தேர்ந்தெடுத்த வழிகளை இன்றும் நினைக்கையில் உள்ளம் அக்களிக்கின்றது.

**எனது முதல் பயிற்சி :**

எப்பொழுதும் மனிதர்களை இறைப்பராமரிப்பில் வைத்திருந்த இறைவன், தன் மகனை மனித பராமரிப்பில் விட்டதுதான் விசித்திரமான ஒரு செயல். இறைமகனாகிலும் மரியின் மகனாகத்தான் வளர்ந்தார். அவ்வாறே இறை மகனின் பாதையில் நான் செல்ல, மரியின் மகளான என் தாய் என்னை இறைபக்தியில் வளர்த்தெடுத்தாள். "நான் இன்று இருக்கும் இந்த நிலைக்குக் காரணம் என் தாய் தான்" என்ற புனித அகுஸ்தினாரின் வார்த்தைகளை நான் கடன் வாங்கினாலும் அது மிகையாகாது. மேலும் ஏழு வருடங்கள் என்னை விவிலிய மாணவனாகவும், ஏழு வருடங்கள் என்னை விவிலிய ஆசிரியராகவும் வளர்த்தெடுத்தது என் "VBS குடும்பம்" Vacation Bible School, Oulgaret, Puducherry).

**இயேசு சபையில் :**

இறையழைத்தலை உணர்ந்து அதில் பயணிக்க முடிவெடுத்த எனக்கு இறைப்பணியாளர்களின் வழிகாட்டுதலினால், என் ஆன்ம பசி தீர்க்க வாழ்வு முடியும்வரை உணவளிக்க இறைவன் அருளியது இயேசு சபை. இயேசு சபைக்கும் எனக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு. அது என்னவென்றால், வாழ்வில் இயேசு சபை என்ற ஒன்றை அறிந்திராத நான் முதல் முறையாக அச்சபையைப் பற்றி அறிந்தது, அது என் வாழ்வாக மாறியபோதுதான்.

ஒரு பணியை எப்படியும் செய்யலாம் என்பதற்கும், இப்படித்தான் செய்யவேண்டும் என்பதற்குமான வித்தியாசத்தை நான் காலடி எடுத்துவைத்த முதல் நாளிலிருந்து எனக்கு உணர்த்தியது இயேசு சபை. இயேசுவோடு, இயேசுவிற்காக, இயேசு சபையில் என்ற வார்த்தைகளைப் பார்க்கும்போதும், புனித இஞ்ஞாசியார், புனித பிரான்சிஸ் சவேரியார் , புனித அருளானந்தர் போன்ற மாபெரும் இறைப்பணியாளர்கள் பயணித்த இயேசு சபை என்ற பாதையில், அவர்கள் சுவடுகளின்மேல் சிறுவன் என் பாதமும் பட்டிருக்கிறது என்று நினைக்கும்போது, எழும் நன்றிப் பெருக்கை விவரிக்க வார்த்தைகள் போதாது.




**இயேசு சபை குருத்துவப் பயிற்சி :**

உலகத்தைப் படைக்க திருவுளம் கொண்ட இறைவன் படைப்பிற்கெல்லாம் சிறந்த படைப்பாகிய மனிதனை முதலில் படைத்திருந்தால் என்ன நேர்ந்திருக்கும்? மனிதன் சிறந்த படைப்பாகத்தான் இருந்திருப்பான். ஆனால் இறைவன் சிறந்த படைப்பாளியாக இருந்திருக்க முடியாது. ஆனால் சிறந்த படைப்பிற்கான வாழ்வாதாரம் அனைத்தையும் படைத்தபின் மனிதனை உண்டாக்கி வளம் வர வைத்தது இறைப்



அந்தோனி ப்ரோன்சா சே.ச. (1660) போர்த்துக்கல் நாட்டு மருத்துவக் கழகத்தில் தன் வெள்ளை மேனி இந்தியர்களைப் போல கருப்பு மேனி ஆகும்படியாக ஏதேனும் ஒரு திரவம் கண்டுபிடிக்க வேண்டினார்.

படைப்பின் மணிமுடியாய் அமைந்தது. அவ்வாறே அருள்பணியாளனாய் நான் என் இறைவன் கையில் ஒரு கருவியாய் மாறுவதற்கு அடிப்படையிலிருந்து என்னென்ன தேவைப்படுகிறதோ அத்தனையும் எனக்குள் உட்புகுத்தும் ஒரு குருத்துவப் பயிற்சியை எனக்குக் கொடுத்து வருகிறது இயேசு சபை.

அருள்பணியாளர் என்று சொன்னால் திருப்பலி புத்தகம் ஒன்று படித்தால் போதும் என்ற மனநிலையிலிருந்த என்னை ஒரு அருள்பணியாளருக்கு இறுதியாகக் கொடுக்கப்படும் ஒரு எளிய புத்தகம்தான் அது என்ற தெளிவிற்கு கொண்டுவந்தது இயேசு சபை. மிகக் குறிப்பாக கீழ்ப்படிதல் என்பது அனைத்து சபைகளின் வார்த்தைப்பாடு என்றாலும், கீழ்ப்படிதலை மூன்றாவது மற்றும் மிக முக்கிய வார்த்தைப்பாடாக ஏற்படுத்திய புனித இஞ்ஞாசியார் அதனை இயேசு சபையின் தலையாயப் பண்பாக அமைத்துள்ளார். அதனாலோ என்னவோ இயேசு சபையாளர்களால் இருபத்து ஆறு வயது முற்றிய மூங்கிலையும் நேற்று பூமி வெளிக்கொணர்ந்த தளிர்போல் வளைக்க முடிகிறது. வடிவம் கொடுக்க முடிகிறது.



**எனது இயேசு சபை பயிற்சியாளர்கள் :**

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும். ஆம், என் தூண்டுகோல் என் இயேசு சபைப் பயிற்சியாளர்கள். கிறிஸ்துவை அறிவியுங்கள். தேவைப்பட்டால் வார்த்தையைப் பயன்படுத்துங்கள் என்ற புனித அசிசியாரின் வார்த்தைகளின் உருவம்தான் என் இயேசு சபைப் பயிற்சியாளர்கள். கோடி நபர்களோடு ஒருவனாக சுற்றித் திரிந்த என்னை பத்து நபர்களில் ஒருவனாகப் பார்த்து அங்கீகரித்து உருகொடுக்கும் ஆசான்கள் இவர்கள். இறுகிய நிலம் குடைந்து, இனிய நீர் கொணறும் துளைகள் போல், புறையேறிய என் குறைபாடுகளில் புதைந்திருந்த மதிப்பீடுகளை வெளிக்கொணர்ந்த இறைத்தூதுவர்கள் இவர்கள். கல்வி, பிற பயிற்சிகள், இறைப்பணி, கலைகள் என எல்லாவற்றையும் ஆழத்திற்குச் செல்லுதல் என்னும் ஒரே அடிக்குறிப்பின் அடிப்படையில் என் படகு நிரம்ப மீன் பிடிக்கும் தகுதியடையச் செய்திருக்கிறது இவர்களின் குருத்துவப் பயிற்சி.

**இறுதியாக :**

காலம் தப்பிப் பிறந்த குழந்தை நான் (1 கொரிந்தியர்-15:8), என்று கூறிய பவுலடியாரைப்போல் உலக மாயையிலிருந்து, உன்னத பணிக்கு இறைவன் அழைத்த என்னை, ஒரு குழந்தையாக வளர்த்து வருகிறது இயேசு சபை. ஆன்மிகப் பாதையிலும், மாறி வரும் சமூகச் சூழலில் பணிசெய்ய காலத்திற்கேற்ற சமூகப் பாதையிலும் நடந்து, மண்ணுலகில் தீமூட்ட வந்தேன் (லூக்கா-12:49) என்று கூறிய இயேசுவின் அடிச்சுவற்றைப் பின்பற்றி, ஆன்மிகம் மற்றும் சமூக நீதி எனும் தீயை மூட்ட இயேசுவோடு, இயேசுவிற்காக, இயேசு சபையில் அருள்பணியாளனாக இறைவனை வேண்டுகிறேன்.

**என் இறையழைத்தல் செபம் :**

கருணைப்பெருங்கடலே எம் பரம்பொருளே, தகுதியற்ற எளிய அடியேனாகிய என்னை உம் பணிக்காக அழைத்ததற்காய் நன்றி கூறுகிறேன். தான் அழைத்தவரை புனிதப்படுத்துகிறவரும், தான் புனிதப்படுத்தியவரை பாதுகாக்கிறவருமான இறைவன் என்னை புனிதப்படுத்தி பாதுகாப்பீராக! (செப்பனியா 1:7) நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே, நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே. (பிலிப்பியர் 1:21) என்ற நிலையை ஒவ்வொரு நாளும் அடைய எனக்கு உதவிசெய்யும். அன்னை மரியே என் அன்புத் தாயே, வானத் தூதர்களே புனிதர்களே, காவல் தூதரே, அதிதூதர்களே என் அழைப்பில் நான் வளர எனக்காக இறைவனிடம் மன்றாடுங்கள். ஆமென்.





சுவாமி பரமானந்தா என்று அழைக்கப்பட்ட அருள்பணி அந்தோனி ப்ரோன்சா சே.ச. (1660) மறவ நாட்டில் பணியாற்றினார்.




## டைட்டானிக் கப்பலில் இயேசு சபையாளர்

அருள்பணி ப்ரெளன் இருபதாம் நூற்றாண்டில் அயர்லாந்தின் தலைச்சிறந்த புகைப்படக்காரர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். அவர் இயேசு சபையில் நுழைவதற்கு முன்னர் ஐரோப்பாவை சுற்றிப் பார்க்க அவரது கர்தினால் மாமா ஏற்பாடு செய்தார். அவரது பயணத்தில் படம் எடுக்க ஒரு காமிராவையும் பரிசளித்தார். அவர் பயணித்த கப்பலின் பெயர் டைட்டானிக். 1985 இல் இவரது இறப்பிற்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பெட்டியில் இருந்த புகைப்படங்கள் தான் 11 ஆஸ்கர் விருதுகளைப் பெற்ற ஜேமஸ் கமரூன் இயக்கிய டைட்டானிக் படம் தயாரிப்பதற்கு உதவிய ஓரே மூலச் சான்றாகும்.

## டிசம்பர் 2019 பாதைகள் டீல் No டீல்-4 வெற்றியாளர்கள்

**பதில்கள்:**

**தொடர் வார்த்தைகளின் சுருக்கெழுத்தை விரிவுப்படுத்துக. (4x2=8)**

1. அனுபவத்தை ஆராய்ந்து இறையொளியில் ஈடுபடும் (01)
2. வாசகர் அனைவருக்கும் அறிய வாய்ப்பு (06)
3. இறைகுரலுக்கு இணங்கிடும் இளைஞனாய் (12)
   இளைஞர் இயேசு இளையோரின் (09)
   இளைஞர் இயேசுவே. இதையொட்டியே (09)
4. காணும் யாவராலும் யாவற்றிலும் (25)

**பொருத்துக. (7x1=7)**

1. சார்டின் - உயிர்ப்பு ஞாயிறு (08)
2. சாந்தப்பா - பத்மஸ்ரீ (15)
3. அரூர் - அருளகம் (20)
4. உருவமில்லா அம்மன் - மனத்தேவு (22,23)
5. ஒயின் - கீனோ (21)
6. கிளாவியஸ் - பதன்மப்புள்ளி (23)
7. எட்வர்ட் - மொரிஷியஸ் (28)

**விடை தருக. (5x2=10)**

1. அருள்தந்தை விக்டர்
2. கடவுள் உன்னை அன்பு செய்கின்றார், கிறிஸ்து உன்னை மீட்கின்றார். கிறிஸ்து உயிருடன் இருக்கின்றார்.(10)
3. சமாதானம், நல்லிணக்கம், சுதந்திரம் (15)
4. இறையாட்சிப் பணியில் இயற்கையும் இலக்கு மக்களும் விடியல் காண.(23)
5. என்றும் வாழும் கிறிஸ்து தொடர்ந்து அனைவராலும் குறிப்பாக இளையோரில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்பதை வலியுறுத்துகின்றன (09)

**முதல் பரிசு :**

செல்வன் ஷர்மா ஷாம்ராஜ், இனிகோ இல்லம் திருச்சி.
செல்வன் ஹெர்மன், திருவாரூர்.
செல்வன் ரிச்சர்ட் டேனியல், இனிகோ இல்லம் திருச்சி.
செல்வன் ஆண்டனி தீபக், இனிகோ இல்லம் திருச்சி.

**இரண்டாம் பரிசு :**

செல்வன் ஆன்றோ மகிழன், செங்கோட்டை.
செல்வன் ஆண்டனி ஆல்பர்ட், திண்டுக்கல்.
செல்வன் எபி சத்தியசீலன், திண்டுக்கல்.

**மூன்றாம் பரிசு :**

திருமதி எஸ்தர் இம்மாணுவேல், பரமக்குடி.

**பங்குபெற்ற அனைவருக்கும் வெற்றியாளர்களுக்கும் வாழ்த்துக்கள்**

**ஆறுதல் பரிசு :**

செல்வன் டெரி இன்பன்டோ, சேலம்.
செல்வன் குழந்தையேசு, திருவையாறு.
செல்வன் மேக்மில்லன், தூத்துக்குடி.
செல்வன் அமுதன், இனிகோ இல்லம் திருச்சி.
செல்வன் அருள் இன்பரசு, இனிகோ இல்லம் திருச்சி.
திரு பால்சன் பியோ, தூத்துக்குடி.
அருள் சகோதரி வினிதா, திருச்சி.
செல்வன் அபின், கொல்லம்.
செல்வன் ஜான் நிக்சன், தூத்துக்குடி.
செல்வன் யுவராஜ், இனிகோ இல்லம் திருச்சி.
செல்வன் கார்த்திக் வர்ஷன், இனிகோ இல்லம் திருச்சி.
திருமதி அருள் சகாய லிசி, மேரிஸ் தோப்பு திருச்சி.

**ஊக்கப்பரிசு :**

செல்வன் புஷ்பராஜ் (VI Std), இனிகோ இல்லம் திருச்சி.



அருளானந்தர் தனது 20 வருட பணிவாழ்வில் 20000 பேர் மெய்ம்மறையைத் தழுவ காரணமானார்.

# முன்னாள் மாணவர் மன்றக் கூடுகை 2020
## (JAAI National Congress 2020)

- **அருள்பணி அன்பரசு மரியராஜ் சே.ச.** கருமாத்தூர்.

முன்னாள் மாணவர்கள் இயேசுசபைக் கல்வி நிறுவனத்தில் படித்தவர்கள் என்ற நிலையில் மட்டும் ஒன்றிணைந்து பழைய நினைவுகளை நினைத்துப்பார்த்து நண்பர்களைச் சந்தித்து பகிர்ந்து அத்தோடு பிரிந்து செல்வதில்லை. படித்த பொழுது இயேசுசபையினர் கற்றுத்தந்த விழுமியங்களை வாழ்வாக்க முயன்ற முயற்சிகளையும் அதில் கிடைத்த வெற்றி தோல்விகளையும் தங்களுக்குள் பகிர்ந்துகொள்ளும் நேரமாக இது அமைகிறது. இது இன்று நேற்று அல்ல 50 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நடந்து வந்துகொண்டிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரியது.

ஒன்பதாவது அனைத்திந்திய முன்னாள் மாணவர் மன்ற ஒருங்கிணைவு JAAI (Jesuit Alumni Association of India) கடந்த ஜனவரி 17, 18, மற்றும் 19, 2020 இல் திருச்சி தூய வளனார் கல்லூரியில் நடைபெற்றது. அருள்பணி ஜார்ஜ் பட்டேரி, மதுரை மாநிலத் தலைவர் டெனிஸ் பொன்னையா மற்றும் புதிதாய் பிறந்த சென்னை மாநிலத் தலைவர் ஜெபமாலை இருதயராஜ் ஆகிய இயேசுசபைத் தலைவர்கள் முன்னிலையில் இணக்கமான உலகத்திற்காக இணைந்து பணியாற்றுதல் Networking for a Harmonious World என்ற தலைப்பில் இக்கூடுகை நடைபெற்றது.

தெற்காசிய இயேசு சபை மாநிலத்தலைவர் அருள்திரு ஜார்ஜ் பட்டேரி நம் முன்னாள் மாணவர்கள் ஆன்மாவின் உள் அமைதி (ஆத்ம சந்துஸ்டி Inner Peace of Soul) என்ற ஒன்றின் அடிப்படையில் தங்களின் பணிகளை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று ஊக்கப்படுத்தினார். அருள்திரு டெனிஸ் பொன்னையா அவர்கள் 36 ஆம் இயேசுசபை பேரமர்வின் நான்கு முக்கிய பணிகளான ஒத்துழைத்தல், இணைந்து பணியாற்றுதல், பொதுவில் தேர்ந்து தெளிதல் மற்றும் அனைவரிடமும் நல்லிணக்கத்தை உருவாக்கும் பணி என்பனவற்றை கோடிட்டுக்காட்டிப் பேசினார். சென்னை மாநிலத் தலைவர் அருள்பணி ஜெபமாலை இருதயராஜ் அவர்கள் அனைத்து வகையான ஒடுக்குமுறைகளிலிருந்தும் ஏழைகளைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளில் மூழ்குவதற்கு அனைத்து முன்னாள் மாணவர்களையும் தூண்டினார். முதல் நாள் அமர்வுகளை டெல்லியில் உள்ள ஸ்டீபன் கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் ஜான் வர்க்கீஸ் தலைமையேற்று நடத்தினார்.

இரண்டாம் நாள் அமர்வுகளில் நீதி அரசர் சந்துரு, கொல்கத்தா தூய சவேரியார் பல்கலைக்கழகம் துணைவேந்தர் அருள்பணி பெலிக்ஸ்ராஜ், ஃபிரண்ட்லைன் பத்திரிகையின் ஆசிரியர் விஜய் சங்கர், வியன்னா UNIDO அமைப்பின் மேனாள் செயலர் ஜெபமாலை விண் ஆராய்ச்சி, திருவனந்தபுரம் Center for Development Studies இன் பேராசிரியர் இருதயராஜ் மற்றும் மும்பையைச் சார்ந்த தன்னார்வளர் வைசாலி பாரதி ஆகியோர் கலந்துகொண்டு தங்களின் அறிவார்ந்த சொற்பொழிவுகளால் முன்னாள் மாணவர்களுடன் நடந்த கலந்துரையாடலில் பங்கேற்று சிறப்பித்தனர். அன்றையதினம் மாலையில் தூய வளனார் கல்லூரி மற்றும் தூய வளனார் பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. மாலை விருந்தில் திருச்சி பாராளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசு கலந்துகொண்டு சிறப்பித்தார்.

மூன்றாம் நாள் நிகழ்வில் அருள்பணி ஜெரி தானம் இயக்கத்தினை அறிமுகம் செய்து இரத்ததானம் முதல் உடல் உறுப்புதானம் வரை நாம் வாழும்போதும் வாழ்ந்த பின்னும் மற்றவர்களுக்கு உதவியாய் இருப்போம் என்று பிறருக்காக வாழ ஊக்குவித்து பேசினார். நிறைவுவிழாவில் டாட்டா குழுமத்தின் தலைமை நிதி அதிகாரி இராமகிருஷ்ணன் மற்றும் நம் நாட்டு பிரதம மந்திரியின் தனிச் செயலர்களில் ஒருவரான திரு. திருப்புகழ் IAS அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இம்மூன்று நாட்களிலும் 750 முன்னாள் மாணவர்கள் இந்தியா முழுவதிலிமிருந்து வந்து பங்கேற்றுப் பயனடைந்தனர்.



ஹிட்லரின் நாசிச கொள்கைகளுக்கு தலைவணங்காது எதிர்த்து குரல் கொடுத்த அருளாளர் ரூபர்ட் மேயர் சே.ச. (1876–1945) ஓர் இயேசு சபையாளர்.

# விசுவாசநாதர் சுவாமிகள் (1799-1840)

- அருள்பணி. R. ஜார்ஜ் சே.ச. ஜூபிலி நாயகர்.

இயேசு சபைக்கும் தமிழக திருஅவைக்கும் உள்ள தொடர்பு மிகவும் நெருக்கமானது. சபையின் தொடக்கத்திலேயே (1540) இஞ்ஞாசியார் தனது ஆத்ம நண்பர் சவேரியாரை மறைப்பணிக்காகத் தமிழகம் அனுப்பினார். இவரைத் தொடர்ந்து இருநூறு ஆண்டுகளாக நூற்றுக்கணக்கான இயேசு சபையினர் தமிழகம் வந்து மறைப்பணி ஆற்றியுள்ளனர்.

1773 ஆம் ஆண்டு இயேசு சபை பாப்பானவரால் தடை செய்யப்பட்டதால், சுமார் 70 ஆண்டுகள் இயேசு சபையினரின் சேவை தமிழகத்திற்குக் கிடைக்காமல் போய்விட்டது. இந்த இடைக்காலத்தில் பாரிஸ் வேதபோதகக் குருக்களும் (MEP) வேறு சபையினரும் தமிழ் மக்களின் ஆன்மிகத் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்திருக்கிறார்கள்.

இயேசு சபை மீதான தடை 1814 ஆம் ஆண்டு நீக்கப்பட்டது. 1838 ஆம் ஆண்டு தந்தை மார்டின் அலெக்சாண்டர், தந்தை லூயி கார்னியர், தந்தை லூயி துராங்கே, தந்தை ஜோசப் பெர்ட்ரின்ட் ஆகிய நான்கு இயேசு சபைக் குருக்களும் அக்காலத்தில் பிரஞ்சு ஆட்சிக்கு உட்பட்டிருந்த பாண்டிச்சேரியில் வந்து இறங்கினார்கள். தந்தை மார்ட்டின் தன் பெயரை விசுவாசநாதர் என்று மாற்றிக்கொண்டார். வேத போதக சபை தந்தை மூசே MEP தந்தை விசுவாசத்தைக் காமநாயக்கன்பட்டிக்குக் கூட்டிச்சென்றார். தொடர்ந்து ஒரு சில மாதங்கள் தந்தை விசுவாசம் தூத்துக்குடி வட்டாரத்தில் பணி செய்தபின் காமநாயக்கப்பட்டிக்குத் திரும்ப வந்து 1838-1839 ஆண்டுகளில் பங்குத் தந்தையாகப் பணியாற்றினார். அடுத்து இராஜகெம்பீரத்துக்குச் சென்றார்.

அந்நாள்களில் இராமநாதபுரம் வட்டாரத்தில் (மறவநாடு) மறைப்பணி செய்த ஐரோப்பியக் குருக்கள் பட்ட துன்பதுயரங்கள் கொஞ்சநஞ்சமல்ல. நாடு முழுவதும் கண்ணுக்கு எட்டிய தொலைவில் காடுகள். சாலைகள் எதுவும் கிடையாது. எங்கும் ஒற்றையடிப்பாதை.

1739 ஆம் ஆண்டு மறவ நாட்டில் பணியாற்றிய சின்ன சவேரியார் எனப்படும் தந்தை ஜேமஸ் தே ரோசி பிரான்ஸ் நாட்டிலிருந்த தனது நண்பருக்கு எழுதிய கடிதத்தில் சில வரிகள்: துன்பமும் துயரமும் மறைப்பணியாளர்களின் உணவும் பானமும். வியாதி வந்தால் மருந்தோ மருத்துவரோ கிடையாது. ஆன்மிக காரியத்தில் கலந்து ஆலோசிக்கவோ ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தவோ அருகில் குருக்கள் கிடையாது. ஆனால் இதில் நான் கொடுத்துவைத்தவன். என் அருகில் ஒரு குருவானவர் இருக்கிறார். ஆனால் அவரைப்பார்க்க நான் நான்கு நாள்கள் நடந்து செல்ல வேண்டும்!.... பசிக்கு உண்ண ரொட்டி, பழம், மீன், முட்டை எதுவும் கிடையாது. சுட்டெரிக்கும் வெயிலில் நடந்து நாக்கு வறண்டு போனால் குடிக்க நல்ல தண்ணீர் கிடையாது. ஊரணியில் கிடக்கும் மழை நீரைத் தேத்தாங்கொட்டை போட்டுக் கலக்கி வடிகட்டித் தெளியவைத்துக் கொடுப்பார்கள். அதன் மணம், ருசி, நிறம், எதையும் கண்டுகொள்ளாமல் கண்ணை மூடிக் குடிக்க வேண்டும்






வேதபோதகர் அகஸ்டின் கப்பெல்லி சே.ச. (1679–1715) பரமக்குடி அடுத்த கமுகர்கடையில் விஷம் வைத்துக் கொல்லப்பட்டார்.

இந்தக் கடிதம் எழுதப்பட்ட நூறு ஆண்டுகள் கடந்த பின்னர் தான் விசுவாசநாதர் இராஜகெம்பீரம் சென்றார்.

விசுவாச நாதர் 1839 ஆம் ஆண்டு பங்குப் பணியைத் தொடங்கினார். நாள்தோறும் வெயிலில் நடைப்பயணம், கொசுக் கடியையும் கண்டுகொள்ளாமல் இரவில் கிராமங்களில் தங்கிக் கொள்ளுதல். அங்கு கிடைப்பதை உண்பதும், குடிப்பதும் தந்தைக்குப் பழக்கமாகிவிட்டது.

இராஜகெம்பீரம் பங்கைச் சேர்ந்த ஊர் இடைக்காட்டூர். இரண்டு ஊர்களுக்கும் இடையே உள்ள தூரம் இருபது கல் தொலைவு. அங்கு காலரா நோய் பரவியிருக்கிறது. மக்கள் சாகிறார்கள் என்று தந்தைக்குச் செய்தி வந்தது. செய்தி கேட்ட தந்தை ஆடிப்போனார். ஆடுகள் அல்லல் பட ஆயர் அமைதியாக இருக்க முடியுமா? நோயில் பூசுதல் கொடுக்கத் தேவையான பொருள்களையும் மருந்துகளையும் எடுத்துக்கொண்டு தந்தை இடைக்காட்டூரை நோக்கி ஓடினார். மக்கள் இறந்து கொண்டிருந்தார்கள். தந்தை கண்ணீர் வடித்தார். செபித்தார், மருந்து கொடுத்தார். மருந்தாலும் செபத்தாலும் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டன. மருந்தும் தீர்ந்தது.

இந்நிலையில் தந்தைக்கும் காலரா நோய் வந்தது. யாருக்காகத் தந்தை தன் வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருந்தாரோ அந்த ஆண்டவர் பொறுப்பில் தன்னை ஒப்படைத்துவிட்டுத் தரையில் சாய்ந்தார். மக்கள் அவரைச் சுற்றிப் புலம்பி அழுதார்கள், கண்ணீரும் கம்பலையுமாய் முழங்காலில் இருந்து செபித்தார்கள். அவர்கள் வேறு என்ன செய்ய முடியும்? தொலைவில் பணியாற்றி வந்த குருக்களுக்குச் செய்தி சொல்ல ஒருசிலர் ஓடினார்கள், தந்தையோ, “நான் சாவதற்கு முன் குருக்கள் யாராவது வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி, நான் கடவுளின் கரங்களில் இருக்கிறேன். அவரது திட்டம் நிறைவேறட்டும். அதுவே எனக்குப் போதும்” என்று சொல்லி அமைதி காத்தார். குருக்கள் யாரும் வரவில்லை. அமைதியாக ஆண்டவர் கையில் தன் ஆவியை ஒப்படைத்தார். அவர் இறந்தது 1840ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் நாள.

தந்தையின் மூச்சு அடங்கியபின்தான் தந்தை பெட்ரண்ட் வந்து சேர்ந்தார். தந்தையின் விருப்பப்படி அவரது உடல் இராஜகெம்பீரத்துக்கு கொண்டு சென்று அடக்கம் செய்யப்பட்டது.

தந்தை விசுவாசநாதர் தூத்துக்குடியில் பணியாற்றியபோது ஒரு குறிப்பட்ட வேப்ப மரத்தின் நிழலில் அமர்ந்துதான் மக்களுக்கு அறிவுரையோ, திருமறைக்கல்வியோ கற்றுக்கொடுப்பார். ஆகையால் அவர் இறந்தவுடன் தூத்துக்குடி மக்கள் அந்த மரத்தின் இலைகளை வீடுகளுக்குக் கொண்டு சென்றார்கள். அந்த இலைகளில் தந்தை அவர்களின் ஆசீர் இருக்கும் அது வீட்டுக்கு ஆசீரும் வியாதிகாரர்களுக்கு குணமும் அளிக்கும் அன்று அம்மக்கள் நம்பினார்கள். இலை தளைகளோடு இருந்த மரம் மொட்டை மரம் ஆனது.

விசுவாசநாதரை மக்கள் ஒரு புனிதர் என்றே கருதினார்கள். தொடக்கத்திலிருந்தே அவரது கல்லறை ஒரு திருயாத்திரை தலம் ஆனது. நாலா திசைகளிலிருந்தும் மக்கள் இங்கு வர ஆரம்பித்தார்கள். காணிக்கைகள் செலுத்தினார்கள். எண்ணெய் விளக்குகளை ஏற்றினார்கள், குழந்தைகளுக்கு விசுவாசம் என்று பெயரிட்டனர்; மொட்டை போட்டனர். இச்செய்தி உரோமாபுரி வரை சென்றது. இயேசு சபை தலைவர் ஆச்சரியப்பட்டார். அதே சமயம் விளக்குகள் எரிப்பதற்குப் பதில் அந்தப் பணத்தை உண்டியலில் போட்டால் கோயில் கட்ட உதவுமே என்றும் கருத்துத் தெரிவித்தார். மக்கள் காணிக்கைப் பெட்டியில் பணம் போட ஆரம்பித்தார்கள். தந்தை கார்னியர் ஒரு சிறு கோயிலைக் கட்டி முடித்தார்.

சமீபத்தில் அந்தக் கல்லறைக்கு சென்றேன். அங்கு அணையா விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்ததைப் பார்த்தேன். அது தந்தை விசுவாசநாதர் மக்கள் மத்தியில் ஏற்றிவைத்த விசுவாசத்தின் அடையாளம் போலும்! இந்த விசுவாச ஒளியை மங்காது என்றும் சுடர்விட்டு எரிய செபித்தேன், செபிக்கிறேன். நீங்களும் என்னோடு இணைந்து செபியுங்கள்.



1546 ஆம் ஆண்டு திருத்தந்தை மூன்றாம் பவுலின் Exponsis Nobis என்ற ஆணை ஓலையின்படி அருள்சகோதரர்கள் இயேசு சபையில் சேர்க்கலாம் என்ற அனுமதி வழங்கப்பட்டது.

# துறவற சகோதர அழைப்பு

- சகோ. ஜான் ஜோ பிரபாகர் தி.இ.ச. இன்டோர், மத்திய பிரதேசம்

ஓர் அழகான நதிக்கரையில் ஆனந்தமாக நீந்திக்கொண்டிருந்த மீனைப் பார்த்த குரங்கு ஒன்று "மரம் ஏறத்தெரியாமல் இருப்பது வீண்" எனச் சொல்ல, அதைக் கேட்ட மீன் இரண்டு நாட்களாக சோர்வாக இருந்தது. மிகவும் சோர்வாக இருந்த அந்த மீனைக்கண்டு "மரத்தில் ஏறத்தெரிவது உயர்வானது என யார் சொன்னது ? அப்படி சொன்ன குரங்கிற்கு ஆழ்கடலில் நீந்தத் தெரியாது. இறைவன் ஒவ்வொரு உயிரினத்திற்கும் தனித்தன்மையைக் கொடுத்திருக்கிறார். நாம் எதில் தகுதியாக இருக்கிறோமோ அதில் சிறந்து விளங்கி, மற்றவர்களின் தனித் தகுதியை ஊக்கப்படுத்தினால் மட்டுமே இறைவன் விரும்பிய அழகான உலகை நம்மால் அனுபவிக்க முடியும்" என அந்தப் பெரிய மீன் சொன்னதைக் கேட்ட பின்பே இந்த மீன் இயல்பு நிலைக்குத் திரும்பியது. இதேபோல் தான் நாம் பெறும் அழைப்பும் தனித்துவம் வாய்ந்தது.

இயேசுவின் இறையாட்சி விழுமியங்களை மையமாகக் கொண்டு, இயேசுவின் மதிப்பீடுகளை தங்கள் வாழ்க்கை முறையாகக் கொண்டு, நற்செய்தி விழுமியங்களை பணி வாழ்வின் வழியாக வெளிகொணரும் ஆர்வம் கொண்ட குழு தான் துறவற சகோதரர்கள்.



## சகோதரத்தின் வரலாற்றுப் பின்னணி :

சகோதரன் என்ற வார்த்தை சக - உதிரன் என்ற வார்த்தையில் இருந்துப் பிறந்தது. இதன் பொருள் ‘ஒரே தாயின் உதிரத்திலிருந்துப் பிறந்தவர்கள்’ என்பதாகும். இதை தொடக்க நூல் (4:2) இல் "பின் அவள் அவன் சகோதரன் ஆபேலைப் பெற்றடுத்தாள் " என இருப்பதை பார்க்கலாம்.

"ஆனால் நீங்கள் ‘ரபி’ என அழைக்கப்பட வேண்டாம். ஏனெனில் உங்களுக்கு போதகர் ஒருவரே. நீங்கள் யாவரும் சகோதரர், சகோதரிகள்." (மத்தேயு 23:8) என தனது சீடர்களுக்குப் பரிந்துரைப்பதன் மூலம் சகோதரத்துத்தின் சீடத்துவத்தை வெளிப்படுத்துகிறார் இயேசு.

ஒரே தந்தையைக் கொண்ட அனைவரும் ‘சகோதரர்கள்’ என அழைக்கப்படுவதை எகிப்தியர்களின் வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது. இத்தகைய வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது சகோதர அழைப்பு.

## பணியை மையமாக்கிய சகோதர அழைப்பு :

இயேசு கிறிஸ்து இறையாட்சிக்காக தனது சீடர்களை அழைத்து, அவர்கள் இறையாட்சிப் பணிக்காக தங்களை அர்ப்பணிக்க அவர்களோடு இருந்து தானும் இறையாட்சிக்கான பணிகளை செய்தார். துறவற சகோதரர்களின் வாழ்க்கை முறை இவர்களின் அழைப்பும், வாழ்வும் இயேசுவின் இறையாட்சிப் பணியை அச்சாணியாகக் கொண்டு இயங்குகிறது என்பதில் எந்த ஐயமும் இல்லை. துறவற சகோதரர்கள் நற்செய்திப் பணி, கல்விப் பணி, அச்சுப் பணி மருத்துவப் பணி, மீட்புப் பணி, விவசாயப் பணி, ஊடகப் பணி, எழுத்துப் பணி, சிறுவர்களுக்கான



ஹிட்லரைக் கொலை செய்ய முயற்சித்ததாக ஆல்பிரட் டெல்ப் என்ற ஜெர்மானிய இயேசு சபையாளர் கொல்லப்பட்டார்.

பணி என காலத்தின் தேவை உணர்ந்து தொடர்ந்து பல பணிகளைச் செய்துகொண்டே வருகின்றார்கள்.

இவர்களின் துறவு வாழ்வு முறையும் இறையாட்சியின் மதிப்பீடுகளை மையமாக வைத்தே அமைந்துள்ளது. மதிப்பு, மரியாதையை கடந்து மதிப்பீடுகளை மையமாக வைத்தே இவர்களின் பணிவாழ்வு என்ற சக்கரம் சூழல்கின்றது.

**ஒளியும் உப்புமான சகோதர அழைப்பு :**

சகோதர அழைப்பு, இயேசு எதிர்ப்பார்த்த உண்மை, அன்பு, நீதி, சகோதரத்துவம் ஆகிய மதிப்பீடுகளை எந்தச் சூழ்நிலைகளிலும் இழக்காமல், பல சவால்களுக்கு மத்தியில் சாட்சிய வாழ்வுக்கு வழிவகுக்கும் பாதையாக அமைந்துள்ளது. இவர்களின் துறவற வாழ்க்கை முறை இவர்களின் பணி வாழ்வில் வெளிப்படுகிறது. சிறிய அளவான உப்பு அதிக அளவில் உள்ள உணவில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தி அது அனைவராலும் சுவைக்கப்படும் நல்ல உணவாகவும், உடலுக்கு வலிமையும் தருவது போல சகோதர அழைப்பு மிகக் குறைவான எண்ணிக்கையில் இருப்பினும் அது மானுடத்திற்கு மாபெரும் நன்மைகளைத் தருகின்றது என்பதில் எந்த ஐயமும் இல்லை.

**இறையாட்சியின் வெளிப்பாடே இந்தச் சகோதர அழைப்பு :**

இயேசுவின் இறையாட்சியின் மதிப்பீடுகள், துறவற சகோதரர்களின் வழி நூல்களிலும், சட்ட நூல்களிலும் நிரம்பியுள்ளது. சகோதர வாழ்வின் ஆன்மிக வாழ்வு, குழுமவாழ்வு, பணிவாழ்வு, கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் ஆகியவை அனைத்தும் இறையாட்சியை மையமாக கொண்டது. இயேசு கண்ட இறையாட்சி கனவு சகோதர அழைப்பில் முழுமையாய் பிரதிபலிப்பதை நம்மால் காண முடியும்.

இயேசுவின் மதிப்பீடுகளையும், குணாதிசயங்களையும் தங்களின் ஆன்மிக குழும மற்றும் பணி வாழ்வில் பிரதிபலிப்பதே சகோதர அமைப்பின் மேன்மையாக அமைகிறது. இயேசுவின் விழுமியங்களை வழியோரத்தில் வைத்து விற்காமல், தங்கள் வாழ்க்கைப் பயணத்தில் அதோடு பயணிக்கின்றனர்.



**இயேசுவின் திரு இருதய சகோதரர்கள் சபை :**

1903 ஆம் ஆண்டு பிப்ரவரி 11 ஆம் நாள் அருள்தந்தை அதிரியான் கௌசானல், சே.ச. அவர்களால் 8 இளைஞர்களைக் கொண்டு உச்சங்குளம் என்ற இருதய குளத்தில் இந்த இயேசுவின் திரு இருதய சகோதரர்கள் சபை தொடங்கப்பட்டது. இந்தியாவில் இந்திய இளைஞர்களைக் கொண்டு தொடங்கப்பட்ட முதல் சகோதர சபை ஆகும். "இயேசுவின் அன்பில் எளியோருக்கு நற்செய்தி" என்ற விருதுவாக்கைக் கொண்டு, இச்சபையின் நிறுவுநர் அருள்தந்தை. அதிரியான் கௌசானல் சே.ச அவர்களின் வழிகாட்டலால் நேரடி நற்செய்திப் பணியை முதன்மையாகக் கொண்டு செயல்படத் தொடங்கியது. 1930 ஆம் ஆண்டு தந்தையின் இறப்பிற்கு பின் அருள்.சகோ. ஆஞ்சலோ, திஇச அவர்களின் வழிகாட்டலில் சொந்தமாக சில நிறுவனங்களைத் தொடங்கி ஏழைகளின் தோழமையில் பயணிக்கத் தொடங்கியது.



குரல்வளை குரலுக்கான உறுப்பு என்பதை ஏரோனிமுஸ் ஃபேபிசியஸ் சே.ச. (1537–1619) மெய்ப்பித்தார்.

**ஏழைகளின் பங்காளிகள் :**

இந்த சபை சகோதரர்களின் எளிமை மற்றும் கடின உழைப்பு கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டே இவர்களின் துறவற ஆடை அமைந்திருந்தது. தொடக்க காலங்களில் அதிகமான வேதனைகளோடும், பொருளாதார நெருக்கடிகளோடும் பயணிக்கத் தொடங்கிய இவர்கள் ஒவ்வொரு கிராமமாகச் சென்று மக்களோடு தங்கி நற்செய்திப் பணி செய்துவந்தனர். பேருந்து செல்ல முடியாத கிராமங்களை தேர்ந்தெடுத்து கல்வி நிறுவனங்களை உருவாக்கினர். ஏழைகளோடு தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர்.

**தூவிய இடத்தில் துளிர்விட்டவர்கள் :**

அயல் நாட்டு உதவியோடும், தங்கள் நிறுவுநர் விட்டுச் சென்ற சொத்துகளையும் கொண்டு பல பணித் தளங்களை உருவாக்கி வந்த பல துறவற சபைகளின் நடுவில், சகோதரர்களின் கடின உழைப்பால் சொந்த நிறுவனங்களை உருவாக்கி அதுவும் வியாபார நோக்கம் இல்லா சேவை மனப்பான்மையோடு பணி செய்து வருகின்றனர்.

**அங்கிகாரத்தை கடந்த அளப்பரிய பணிகள் :**

நேரடி நற்செய்திப் பணியை முதன்மையாகக் கொண்டு தொடங்கிய இவர்களின் பயணம், பல பணிகளை விரிவுபடுத்தி தொடர்கின்றது. கல்விப் பணி, அச்சுப் பணி, மருத்துவப் பணி, மறுவாழ்வு மையங்கள், கல்லூரிகள், பள்ளிகள், செவிலியர் கல்லூரி, பார்வையற்றோர் பள்ளி, மனநலம் குன்றியோர் பள்ளிகள், கருணை இல்லங்கள் என பல பணிகளை தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா,



தெலுங்கானா, ஆந்திரா, மத்திய பிரதேசம், பாட்னா, மற்றும் பிரான்ஸ் தேசத்தில் பணியாற்றி வருகின்றார்கள். இவர்களின் பாதையில் உங்கள் பாதங்கள் பயணிக்கத் தயார்தானா?



## அருள்பணி. ஸ்டானிஸ்லாஸ் சே.ச.
## (1962 -2018)

அருள்பணி. ஸ்டானிஸ்லாஸ் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் வேலாயுதபுரம் கிராமத்தில் திரு. பி.ஏ. மரியதாஸ் மற்றும் திருமதி. பி.ஏ. மரியபாக்கியம் ஆகியோருக்கு மே 08, 1962 அன்று பிறந்தார். விடுதி இயக்குநராகவும், தலைமை ஆசிரியராகவும் இருந்தபொழுது தந்தை ஸ்டானி ஏழை மாணவர்களின் நண்பராகவே இருந்தார், ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இடையிலான இடைவெளியைத் தீர்க்க மாணவர் நலத்திட்டங்களை வழங்குவதற்காக அர்ப்பணித்த அவரது பணிகள் மாணவர் சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அவர் பணியாற்றிய பள்ளிகளில் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தை அறிய ஒவ்வொருநாளும் மதிய உணவு சமைக்கும் இடத்திற்கு வருவார் அதன் தரத்தை பரிசோதிப்பார். புகைப்படம் எடுப்பதில் அவர் கொண்டிருந்த ஆர்வமும் இயற்கையில் இறைவனைக் கண்டுகொள்ளும் பாங்கும் தனிப்பட்ட முறையில் அவர் எதிர்கொண்ட மனஅழுத்தத்தைப் போக்க உதவியாக இருந்தது. தியானம் வழங்குவதில் ஆர்வம் கொண்டவர். அப்பாவிமக்களுக்கு செய்த அநீதிக்கு எதிராக அவருக்கு தார்மீககோபம் இருந்தது. உண்மையில், அந்த காரணத்திற்காகத்தான் இறக்கவேண்டும் என்று அவர் எப்போதும் கூறுவார். எங்கள் கிராமப்புற இறையியலுக்காக நாங்கள் கோமாநகர் கிராமத்தில் தங்கியிருந்தபோது, தலித் மக்களுக்காக அவர் செய்த பணியில் அவர் கொண்டிருந்த உறுதிப்பாட்டை யாரும் காணத் தவறியிருக்க முடியாது, அவர் ஒடுக்கப்பட்டவர்களை மேம்படுத்துவதற்காக தன் சொந்தமுயற்சியில் பலரிடம் உதவிபெற்று அவர்களின் வாழ்வை உயர்த்த பாடுபட்டார்.

தந்தை அவர்கள் தன் மனதில் பட்டதைபேசக் கூடியவர் மக்கள் அவரை எப்படிப் பார்ப்பார்கள், அவருடைய வார்த்தைகள் எவ்வாறு புரிந்துகொள்ளப்படும் என்பதைப் பற்றி கவலைப்படவில்லை. ஸ்டானி தனது மாணவர்களிடையே வாழ்கிறார், எதிர்பாராதவிதமாக கார்மல் பள்ளியில் 2018 பிப்ரவரி 16 ஆம் தேதி பள்ளிக்குச் செல்ல தயாராகும் வேளையில் மாரடைப்பினால் இறைவனடி சேர்ந்தார். பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டார்.

- நன்றி. **அருள்பணி. ஜோ அருண் சே.ச.**



இராபர்ட் தே நொபிலி ஐரோப்பிய நாட்டவருள் முதல் சமஸ்கிருத அறிஞர் ஆவார்.



## அருள்தந்தை. ஸ்டீபன் டி சூசா சே.ச (1939 -2019)

அருள்பணி. ஸ்டீபன் டி சூசா. அவர்கள் 10 பேர் கொண்ட ஒரு பெரிய குடும்பத்தில் செப்டம்பர் 2, 1939 ஆம் ஆண்டு சரியாக 80 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தார். 1958-ஆம் ஆண்டில் இயேசு சபையில் சேர்ந்த பிறகு கல்விசார் பட்டப்படிப்புகளையும் சபை சார்ந்த படிப்புகளையும் கற்றுத் தேர்ந்தார். தன்னுடைய பயிற்சியிடைப் பணியை ஒரு வருடம் தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டையில் விலங்கியல் ஆசிரியராகத் தொடர்ந்தார். 1973-ஆம் ஆண்டு இயேசு சபையில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். மீண்டும் 1975 ஆம் ஆண்டு அதே கல்லூரிக்குச் சென்றார். இல்ல இயக்குநர், பேராசிரியர், விலங்கியல் துறைத் தலைவர், கல்லூரி முதல்வர் என 21 ஆண்டுகள் பல பொறுப்புக்களை ஏற்று சிறப்பாகச் செயல்பட்டார். நற்செய்தி பரப்புரையாளராக ஆஸ்திரேலியாவில் பல பங்குகளில் 17 ஆண்டுகள் பணியாற்றினார். தந்தை ஸ்டிபன் ஆஸ்திரேலிய இயேசு சபையில் 2005 இல் சேரந்தார். உடல் நிலையின் காரணமாக 2013 ஆம் ஆண்டு மீண்டும் பாளையங்கோட்டைக்கு வந்தார். 2015 ஆம் ஆண்டு முதல் திண்டுக்கல் பெஸ்கி இல்லத்தில் உள்ள நவதுறவற மாணவர்களுக்குப் பாடம் கற்றுக்கொடுத்தார். தந்தை ஸ்டீபன் ஆகஸ்டு 17, 2019 ஆம் ஆண்டு காய்ச்சல், தலைவலியின் காரணமாக திண்டுக்கல் தூய வளனார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். 14 நாட்களுக்குப் பிறகு தன்னுடைய பிறந்த நாளை பெஸ்கி இல்ல குழுமத்தோடு கொண்டாட நினைத்தார். ஆனால் உடல்நிலை ஒத்துழைக்காத காரணத்தினால் தன்னுடைய பிறந்த நாளான செப்டம்பர் 2-ஆம் தேதி காலை 5.55 மணியளவில் தன் ஆவியை இறைவனிடத்தில் கையளித்தார். அவருடைய முன்னாள் மாணவர்கள், நண்பர்கள், குருக்கள், அருள்சகோதரர்கள் என பலரும் அவருடை இறுதி ஊர்வலத்தில் திருப்பலியிலும் கலந்து கொண்டனர்.



## அருள்பணி. துரைராஜ் சே.ச. (1937 -2019)

அருள்பணி. துரைராஜ், 1955ஆம் ஆண்டு இயேசு சபை நவதுறவறத்தில் இணைந்தார். 1973-ஆம் ஆண்டு மொரிசியசுக்கு நற்செய்தி பரப்புரையாளராகச் சென்றார். அங்குள்ள இயேசு சபை குழுமத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். முதல் 6 ஆண்டுகள் ரோஸ் பெல்லில் உள்ள தொழிற் பயிற்சி பள்ளிக்குப் பொறுப்பாளராக இருந்தார். தந்தை துரைராஜ் அவர்களுக்கு ஆங்கிலம் கற்பித்தார். மொரிசியசில் விவிலியம் ஒரு பாடமாகப் பள்ளிகளில் கற்றுக்கொடுக்கப்பட்டது. எனவே தந்தை அவர்கள் புதிய ஏற்பாடு நூலினை மிகஎளிமையாக கற்றுக்கொடுத்தார். தந்தை அவர்கள் பள்ளி அனுபவத்தோடு நின்றுவிடாமல் பங்கு அனுபவத்திற்கு தன்னை கையளித்தார். புனித கிளாயர் பங்கில் பங்குத்தந்தையாக சிறப்பாகப் பணியாற்றினார். அந்தப் பங்கில் ஏழை எளிய மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுத்தார். பங்குமக்கள் தந்தையின் ஆழமான ஆன்மீகத்தையும் இறைபக்தியையும் கண்டுபாராட்டினர். இயேசு சபைக்கு நன்றியுள்ளவராக வாழ்ந்தார். தந்தை அவர்கள் ஆங்கில ஆசிரியராக மட்டுமல்ல ஓவியராக, இசையமைப்பாளராக விளங்கினார். 11 ஆண்டுகள் மிகச்சிறப்பாகப் பணியாற்றிய தந்தை அவர்கள் நற்செய்திப் பணியாளராக சாம்பியாவுக்குச் சென்றார். 36 ஆண்டுகள் நற்செய்தி பரப்புரையாளராக மொரிசியசிலும் சாம்பியாவிலும் பணியாற்றிய தந்தையின் உடல் நிலையின் காரணமாக தாயகமான மதுரை மறைமாநிலத்திற்கு தன்னுடைய 75வது வயதில் அழைத்துவரப்பட்டார். புகுமுக நவதுறவறத்திலும் நவதுறவறத்திலும் ஆங்கிலம் கற்றுக்கொடுத்தார். கொன்சாகா அருள்சகோதரர்கள் நவதுறவறத்தில் 3 ஆண்டுகள் பணிசெய்தார். தந்தை அவர்கள் 13 ஜுலை 2019 வரை நன்றாக இருந்தார் ஓய்வறியா உழைப்பாளி. ஆனால் மறுநாள் காலை யாரும் எதிர்பாராவண்ணம் இறைதந்தையின் கரத்தில் தன் ஆவியை ஒப்படைத்து ஓய்வெடுத்தார்.

- நன்றி. **இளவல் லெனின்**



ஜுவன்னா(1535–1573) உலகளாவிய இயேசு சபையின் ஒரே பெண் இயேசு சபையாளர்.

# யூபிலி விழா நாயகர்களை
# பாசத்தோடு வாழ்த்துகிறோம்

## இயேசு சபையில் 50 ஆண்டுகள்


ஆரோக்கிய ராஜ் ஞானபிரகாசம்


அருள் ஜீவன்


அருளானந்தம் சவரிமுத்து


பிரடெரிக் சேவியர் ஜோசப்


ஜெரி ரொசாரியோ


ஜெயசீலன் தாமஸ் பர்னபாஸ்


M.A. ஜோ அந்தோனி


மரிவளன் ராயப்பன்


மைக்கேல் தாஸ் லூர்து


புஷ்பராஜ் ஞானசாமி


தாமஸ் அருளப்பன்

## இயேசு சபையில் 60 ஆண்டுகள்


தனராஜ் ரபேல்


மைக்கேல் ஆலோசனையா

## இயேசு சபையில் 70 ஆண்டுகள்


மாம்ப்ரா C. சேவியர்


சவரிமுத்து மைக்கேல்

# தமிழக இயேசு சபை

## அன்புடன் அழைக்கிறது




# இறையழைத்தல் முகாம் – 2020

இப்புனிதர்களைப் போல வாழ

தமிழக இயேசு சபை அன்புடன் அழைக்கிறது

| சென்னை மறை மாநிலம் | மதுரை மறை மாநிலம் |
|---|---|
| **10 ஆம் வகுப்பு**<br>ஏப்ரல் 14 முதல் 19 வரை<br>இலொயோலா கல்லூரி,<br>வேட்டவலம். | **10 ஆம் வகுப்பு**<br>ஏப்ரல் 14 முதல் 19 வரை<br>தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளி,<br>தேவகோட்டை. |
| **12 ஆம் வகுப்பு**<br>மார்ச் 25 முதல் ஏப்ரல் 1 வரை<br>அய்கஃப் இல்லம்,<br>சென்னை | **12 ஆம் வகுப்பு**<br>மார்ச் 25 முதல் ஏப்ரல் 1 வரை<br>LTI, ஞானஒளிவுபுரம்,<br>மதுரை |
| **கல்லூரி மாணவர்களுக்கு**<br>மே 9, 10<br>இலொயோலா கல்லூரி<br>மெட்டாலா | **கல்லூரி மாணவர்களுக்கு**<br>மே 9, 10<br>தூய சவேரியார் கல்லூரி,<br>பாளையங்கோட்டை |

யேசுவோடு...
யேசுவுக்காக...
யேசு சபையில்...

## இறையழைத்தல் ஊக்குநர்


மதுராலயா, அஞ்சல் பெட்டி எண்-90,
பெஸ்கி வளாகம், திண்டுக்கல்-624 001.
(M) 94444 36280

சென்னை மறைமாநிலப் பணியகம்
இலொயோலா கல்லூரி, நுங்கம்பாக்கம்
சென்னை - 600 034 (M) 74010 33409